

தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஆனி - 2025

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

ஆனி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

*யாவரும் நலமா?*

*காற்றுவெளியின் (2025) ஆனி இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.*

*காற்றுவெளி இதழுக்கான படைப்புக்களை தொடர்ச்சியாக தந்துதவும் அனைத்துப் படைப்பாளர்களுக்கும் எமது நன்றி.*

*சிற்றிதழ்களின் தொடர்ச்சியான வருகைக்கு நிதிப்பங்களிப்பு முதன்மையாக இருப்பினும் படைப்பாளர்களின் பங்களிப்பு அளப்பரியது.*

*நூல்களின்,சிற்றிதழ்களின் அறிமுகத்துக்கென தனியான பக்கங்களை வரும் இதழ்களில் ஒதுக்கவுள்ளோம்.*

*படைப்பாளர்கள் தங்கள் படைப்புக்களை வேறெங்கும் பிரசுரமாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.முகநூலில் பதிவிட்ட படைப்புக்களை அனுப்பிவிட்டு ஏன் பிரசுரமாகவில்லை எனக் கேட்பது அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது.*

*உலகில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டுவருகிறது.அரசியல்,பூகோள நிலைப்பாடுகளின் மாற்றங்கள் எதிர்காலத்தில் மக்களின் வாழ்வு நிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்புகிறோம்.*

*நம்பிக்கையுடன் பயணிப்போம்.*

*நட்புடன்,*

**சோபா**

*01/06/2025*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**


1. மதுரா
2. கமலினிகதிர்(சுவிற்சர்லாந்து)
3. பா. வாசுகி(திருவண்ணாமலை)
4. மலர்மகள்(மதுரை)
5. க. புனிதன்
6. நேசன் மகதி
7. ரகுநாத் வ (மதுரை)
8. சாயிராம். தஞ்சாவூர்
9. சே கார்கவி கார்த்திக்
10. ஐ.தர்மசிங்(நாகர்கோவில்)
11. தங்கேஸ்
12. கா. ந. கல்யாணசுந்தரம் (சென்னை)
13. அ.சீனிவாசன்
14. கவிஞர் மாலதி இராமலிங்கம்
15. த. ரவீந்திரன்
16. ச.ஆனந்தகுமார்
17. DR.ஜலீலா முஸம்மில்(ஏறாவூர்)
18. வேலணையூர் ரஜிந்தன்

**சிறுகதைகள்**

1. ஆதவன் சரவணபவன்
2. ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்
3. குமரி உத்ரா(கன்னியாகுமரி)
4. த.சு.மணியம் (இங்கிலாந்து)
5. கார்குழலி
6. சுந்தரிமணியன்
7. மதியழகி
8. ஜெனனி. மோ (கிளிநொச்சி)
9. யாழ் எஸ் ராகவன்
10. கார்த்தி டாவின்சி
11. பட்டுக்கோட்டை ராஜா

**கட்டுரைகள்**

1. சு.கருணாநிதி (பிரான்ஸ்)



# தேத்தண்ணி சுடவில்லை

பனிமூட்டமான நடுக்கத்தைத் தராத மெலிதான குளிர் பரவியிருந்த காலை. கண்ணாடிக் குவளையைப் பற்றியிருந்தான். ஆவிபறக்கும் சூடான தேத்தண்ணியின் வெப்பம் பரவிப் பற்றியிருந்த கையை அள்ளியது. துரத்தப்பட்டவர்களுக்காக அன்றைக்கொரு நாள் உள்ளங்கை பொக்களிச்சதை சட்டென்று நினைத்தவன் மேசையில் வைத்துவிட்டு வெறுப்பாகச் சாயத் தண்ணியைப் பார்த்தான். சிறிய கண்ணாடிக் குவளையில் நல்ல சிவப்புச் சாயத்தில் தேத்தண்ணி தன்னைப் பார்த்துப் பரிகசிப்பது போல உணர்ந்தான். துரத்தப்பட்டவர்களின் முகங்கள் தோன்றுவதும் மறைவதுமாக அவனுக்கு எரிச்சலை உண்டாக்கின.

கான்டீன் இன்னும் நிறையவில்லை. குளிர் சற்று தணியத்தான் மாணவர்கள் காலையுணவுக்கு வந்து வரிசைகட்டி நிற்பார்கள். உணவுத்தட்டுகளை அடுக்கி வைப்பதில் கான்டீன் ஊழியர்கள் மும்முரமாக இருந்தார்கள். பாத்திரங்களின் உரசலும் கரண்டிகள் தட்டுப்படும் ஓசையும் மட்டும் இந்த அமைதியைத் தொந்தரவு செய்கின்றன.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் பொறியியல் துறையில் கல்வியை சுகந்தன் ஆரம்பித்திருக்கிறான். அளவில் பெரிய மூன்று கான்டீன்கள் மட்டுமல்ல ஒரு சின்ன பெட்டிக்கடை மாதிரி ஒரு கான்டீன் வோர்க்ஷோப் (உலோக மர வேலை பயிற்சிக்கு) கொரிடோர் ஓரமாகவும் இருந்தது. வளாகத்தின் நடுவில் இருந்த பெரிய கான்டீனுக்கு அநேகமாகப் போவான். அங்கேதான் காலை சிற்றுண்டியை முடிக்கும் பழக்கமும் வந்துவிட்டது. காலை உணவுக்கு பெரும்பாலும் கால்வாசி பாண் தூண்டும் அழ ஒதி என்று சிங்களத்தில் சொல்லும் தேங்காய்ப் பால் சேர்த்த உருளைக்கிழங்குச் சொதியும் பருப்பு அல்லது டின் மீன் குழம்பும் இருக்கும். சமையல் சிங்கள முறையில் நல்ல காரமாக இருந்தது. சில நாட்களிலே புதுச் சாப்பாடு பழகிவிட்டது. இன்றைக்குக் காலையில் பசியெடுக்கவில்லை. முதல் கணிதபாடம் முடிய அடுத்தது பிரீ பீரியட். அப்ப சாப்பிடுவம் என்று தன்னை ஆசுவாசப்படுத்தினான். தேத்தண்ணியை விரும்பிக் குடித்தாலும் அந்நியமாகவே உணர்கிறான்.

தேயிலை செடிக்கு எவ்வளவு சோகக் கதைகள் எங்களுக்குத் தெரியும்? தேத்தண்ணி அருந்தும் போது அவற்றை யாரும் பொருட்படுத்துவதில்லை. அது சாமானியனுக்குத் தேவையற்றது என்று புறந்தள்ளிவிடுவார்கள். சுகந்தனுக்கோ துரோகத்தின் துயரை தேத்தண்ணி தந்துவிட்டது. எப்போது தேத்தண்ணி அருந்தும் போதும் நினைவுகளில் கட்டுக்கடங்காமல் அவை வருகின்றன.

அது முதல் இடம்பெயர்வு. ஆனால் முன்னரும் இடம்பெயர்வுகளைப் பார்த்திருக்கிறான். மனதைப் பாதித்த மனித அவலத்தை இன்னும் மறக்காமல் இருக்கிறான். வலிந்து திணித்த அவலம் என்று சிலர் திரும்பி யாழ்ப்பாணம் போகும் போதும் குமுறினார்கள்.

அப்போது அவனுக்குப் பதினைந்து வயசு. படிப்பு ஒருபக்கம் போனாலும் அப்பாவுடன் வயல் வேலையும் செய்து கொண்டிருந்தவன். தச்சன் தோப்பில் சில நெல் வயல் காணிகள் குத்தகைக்கு எடுத்து நெல் விதைப்பார்கள். வீடும் வயல் வரம்புடன் ஒட்டியே இருந்தது.

பச்சை போர்த்திருந்த வயலில் நீர் நிறைந்திருந்த நேரத்தில் ஒரு இரவு. அவலமாகப் பதறிக்கொண்டு ஓடிவந்த மக்கள் இனி அவ்வளவுதான் என்ற கையறுநிலையில் இருந்தார்கள். வாழ்ந்த வீடுகளை விட்டு கால்நடைகளை தவிக்கவிட்டு அனாதைகளாக வந்தவர்களை பார்த்திருக்கிறான். பிறந்து சில மாதங்களான குழந்தைகள் மழையில் நனைந்திருந்தன. இறந்தவை சில துணிகளால் சுற்றி வரும் வழியில் செம்மணி சதுப்பு நிலத்தில் தாட்டிருந்தவர்களையும் சந்தித்திருக்கிறான். சம்பிரதாயமெல்லாம் சாதாரணமானவர்களுக்குத்தான். இவர்களோ அசாதாரணமாக்கப்பட்டவர்கள். வெளியுலகுக்குக் காட்சிப் பொருளாக்கப்பட்டவர்கள் என்ற வருத்தம் இருந்தது. தாறுமாறாக செய்திகள் ஊடகங்களில் வந்தன. நிலவரத்தைப் பார்த்தவனுக்கு இவை உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்ற கணிப்பிருந்தது.

எத்தனை ஆயிரம் மக்கள் 95ல் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சிக்கு வந்தனர்? செம்மணி வெளி அல்லோகல்லோலப்பட்ட நிகழ்வை அவ்வளவு எளிதில் மறந்திருக்கமாட்டான். என்னதான் மூன்றாவது மனிதனாகப் பார்த்தாலும் சாமான்களை கட்டிக்கொண்டு உயிருக்குப் பயந்து மழை வெயில் பார்க்காமல் சேற்றுடம்புடன் இழுபடுகிற அவலத்தைக் கண்கூடாகக் கண்டான்.

அந்த நாட்கள் இன்னும் நினைவில் இருந்தன. தகப்பன் திட்டினதும் கூட,

"உவனுக்குத் தேவையில்லாத வேலை. வீட்டில எவ்வளவு வேலை கிடக்கு"

"ஏனப்பா அவனை திட்டுறீங்கள்? வாற சனத்துக்கு உதவி செய்யப் போறது நல்லதுதானே."

அம்மா சுகந்தனுக்கு வக்காலத்து வாங்கினார்.

"உதுகள் நன்றிகெட்ட சனங்கள்" அப்பாவுக்கு யாழ்ப்பாணத்தாரில் எப்பவும் கரவு. கரவு எண்டதையும் விட ஆத்திரம். அவர் சொன்னதில் இருந்த உண்மைத்தன்மை புரியவில்லை. கஷ்டப்படுற சனத்துக்கு உதவி செய்யாத மனுஷன் எவ்வளவு கெட்டவன் என்று அவர் மேல் கோபம் வந்தது. ஆனால் அவர் இயல்பாக இருந்தார்.

வீட்டுக்கு வீடு தண்ணி வாளியும் தேத்தண்ணி ஊத்தின பானையுமா வந்த சனத்தை கவனித்த நினைவுகள் ஏனோ வந்து போகின்றன. தென்மராட்சிப் பக்கம் கலங்கின நிறத்தில் கிணத்துத் தண்ணி இருக்கும். நல்ல தண்ணி எடுக்க சில கிணறுகள் இருந்ததால் மழையில் நனைந்து களைத்து வருபவர்களுக்கு தங்களாலான உதவியை செய்த ஊர் பெடிகளுடன் சுகந்தனும் போயிருந்தான். நுணாவிலில் A9 வீதியை அண்டி இருந்த தென்னம் தோப்பில் கிடாரத்தில் தண்ணியை கொதிக்க வைத்திருந்தார்கள். சலிக்காமல் தேநீரை ஆத்திக் கொடுத்ததில் சுகந்தனின் உள்ளங்கை சூடு பட்டு பொக்களித்திருந்தது.

"யாழ்ப்பாணச் சனம் நன்றி மறந்ததுகள். உனக்குத் தேவையில்லாத வேலை. நாளைக்கு நாங்கள் போகும் போது கணக்கெடுக்காமல் இருப்பாங்கள் பார்" அப்பா சொன்னது கூட ஞாபகம் வந்தது. நாங்கள் ஏன் அங்க போகப்போறம் என்ற அவரின் அதீத கற்பனையை அவன் இரசிக்கவில்லை. துன்பப்படுகிற மனிதனுக்கு எந்த இடம் ஏது என்று வேறுபிரித்துப் பார்த்தே உதவி செய்ய வேணும். சுகந்தனின் பார்வையில் அப்பா குறுகிய புத்திக்காரர். ஆனால் அன்பானவர் பெருந்தன்மையானவர் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தான். அனுபவம்

அவரைப் பேச வைப்பதாகவே நினைத்தான். அம்மா நடந்ததை சொல்லவில்லை. அவரின் மனஉளைச்சலுக்கும் வெறுப்புக்கும் காரணம் இருப்பதாகவே நம்பினான். என்ன காரணம் எண்டு தெரியாது.

"நான் கொப்பரை கலியாணம் கட்டினத்தில இருந்தே யாழ்ப்பாணத்தரை பற்றி எதுவும் நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கேல மனுஷன்" என்று அம்மாவும் சலித்துக் கொள்வது ஒருபுறம்.

"தலைமுறை தலைமுறையா அப்படித்தானாம்" என்று அம்மா அதையே ஒரு காரணமா சொன்னத சுகந்தனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"மலையகத்து சனம் எங்களை நினைக்கிற மாதிரியோ?" வேணுமென்றே கேட்டான்.

"நீ ஏன் மலையகம் போறா வன்னிச்சனம் எங்களை பாக்கிற மாதிரி எண்டு வையன். இல்லாட்டி இரணைமடுக்குளத்தில் இருந்து தண்ணிய தந்திருக்குங்களே" அம்மா இன்னும் ஒரு படி மேல போய் சுகந்தனுக்கு நிலைமையை விளங்கப்படுத்தினார். அந்த நேரம் அவனுக்கு அது விளங்கவில்லை. இருந்தாலும் நெருப்பில்லாமல் புகையாதே என்ற முடிவில் இருந்தான். ஒரே மொழி பேசினாலும் பிரதேசவாதம் என்ற அரக்கனின் கரங்களில் சிக்கிச் சின்னாபின்னமான உறவுகளையும் நண்பர்களையும் பற்றிய சில விடுப்புகளை தாயிடமிருந்து தெரிந்து கொண்டான்.

யாழ்ப்பாணத்துக்கு சயன்ஸ் ஹாலுக்கு டியூஷன் படிக்க போகும் போது அசூசையான சம்பவங்கள் நடந்ததை நினைவு கூரவும் மறக்கவில்லை.

பிறிதொருநாள் சுகந்தனும் எதிர்பாராத இடம்பெயர்வில் சிக்கினான். A/L எடுத்து பல்கலைக்கழகம் போறதுக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த தருணம். சுகந்தனின் தம்பியும் அந்த வருடம் O/L எடுக்க வேண்டியது. இரண்டாயிரமாம் ஆண்டு. இயக்கம் வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குள் இறங்கின போது நடந்த சம்பவம். அரியாலை தனங்கிளப்பு என்று பல இடங்களில் தரையிறக்கம் நடந்து யாழ் நகரை நோக்கிய ஊடறுப்பு அது.

முதல் இரண்டு நாட்கள் பாரிய வெடிச்சத்தங்கள். முன்னர் யாழ்ப்பாணம் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது கேரதீவுக் கரைக்கு கிளாலி வழியாக வந்து கண்போட்டில் இருந்து அடிக்கும் குண்டுச்சத்தம் கேட்ட அனுபவம் அவர்களுக்கு இருந்தது. இது வித்தியாசமான வெடிப்புச் சத்தம்.

விசாரிச்சுப் பார்த்ததில் இயக்கம் செல் அடிப்பதாக தகவல் கிடைத்தது. சனம் சாமான்களைக் கட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி நகரத் தொடங்கியிருந்தது.

"அண்டைக்கு யாழ்ப்பாணத்தாரை இழுத்துக்கொண்டு வந்தவங்கள் இண்டைக்கு எங்களை செல்லடித்துத் துரத்துறாங்கள். இழுக்கிறதும் துரத்துறதும் தானே இவங்கட வேலை. நாசமாப் போவாங்கள்" போகும் போது அப்பா கறுவிக்கொண்டிருந்தார். பெண்டுலம் போல அங்கும் இங்கும் துரத்தப்படுபவர்கள் என்ற வேதனையை கொட்டினார்.

அப்பாவுக்கு கண்ணெல்லாம் தாண்டு போயிருந்தது. கன்னத்து எலும்புகள் மிதந்து முழுப் பரிமாணத்தைக் காட்டின. தோலும் அளவுக்கு மீறி காய்ந்து கறுத்திருந்தது. நடையில் தளர்ச்சி கூடிக்கொண்டே போனது. அப்பாவைப் பார்க்கும் போதெல்லாம் சுகந்தனின் மனம் கனத்தது. கடந்த இரண்டு நாட்களில் ஊரில் கடைகள் பூட்டியிருந்தன. மிஞ்சியிருந்த அரிசியை கொஞ்சம் கொஞ்சமாக கஞ்சி காச்சிக் குடிச்சதோட ஒரு கிழமை கரைந்துவிட்டது. இனி இருக்க முடியாது. பக்கத்து வீட்டு மணியத்தாரும் குடும்பத்தோட சின்ன மாட்டுவண்டிலில் எல்லா தட்டு முட்டு சாமான்களையும் கட்டிக்கொண்டு போயிவிட்டார்.

மணியத்தார் போகேக்க, "எங்கட பெடிகள் தானே எண்டு பேசாமல் இருக்காத. கண்மூடித்தனமான செல் அடிக்கிறாங்கள். கெதியா வெளிக்கிடு. மக்களுக்கு அடிவிழுந்தால் இராணுவத்துக்கு அடிச்சது தெரியாமல் பட்டுட்டு எண்டு ஆமி சொல்லுறமாதிரி செய்தி போடுவாங்கள்" என்று பீதியைக் கிளப்பிவிட்டிருந்தார். இரவு பார்த்திட்டு விடிய வெளிக்கிடுவம் என்று சுகந்தனும் வீட்டுக்காரரும் ஆயத்தமாகியிருந்தனர். இராணுவமும் அதிகமாக அந்தப் பகுதிக்கு வந்திருக்கவேண்டும். கனரக வாகனங்களின் அதீதமான நகர்வும் போருக்கான ஒத்திகை போலவே தெரிந்தது. பச்சை நிறச் சீருடைகள் அவர்களுக்கு அந்நியமாகிக் கொண்டே இருந்தன. திடீரென்று இவ்வாறு நடக்கும் என்று சுகந்தன் போலவே யாரும் நம்பவில்லை. கையிருப்பில் இருந்த உணவும் தீர்ந்துவிட்டது.

அடுத்தநாள் அதிகாலையில் நிலைமை சரியாக மாறிவிட்டது. தனங்கிளப்பு பக்கம் செல் வீச்சு நடந்ததால் இரவில் தூக்கம் வராமல் இருந்தார்கள். அடுத்து தச்சன் தோப்புப் பக்கம் செல் வந்து விழும் போல இருந்தது. சத்தம் இன்னும் அருகில் கேட்கத் தொடங்கியது. வீட்டின் பிடிப்பில்லாத பூச்சுகள் அதிர்வில் கொட்டுண்டன. துப்பாக்கிச் சன்னங்கள் தலைக்கு மேலால் உராய்ந்துகொண்டு செல்லத்தொடங்கின. நேற்றுக் காலையிலே சாமான்களை கட்டி ஆயத்தமாக இருந்த சைக்கிள்களை எடுத்துக் கொண்டு விறு வீரென்று மிஞ்சியிருந்த அயலட்டை சனங்களுடன் குறுக்கு வீதிகளூடாக A9 பாதையில் ஏறி கைதடி நோக்கி நகர்ந்தனர். அதிகாலை நான்கு மணிக்குப் பிறகு தொடங்கிய பயணம். பின்னால் பளிச் பளிச் என்ற ஒளி குண்டுகளின் ஒவ்வொரு வெடிப்புக்கும் அடிவானில் தெரிந்தது. அவர்களுக்குப் பின்னால் வீட்டு நாயும் ஓடிவந்தது. பிறகு அதைக் காணவில்லை.

கைதடிச் சந்திக்கு வரும்போது நேரம் அதிகாலை ஐந்து மணி இருக்கும். அரைகுறைத் தூக்கம். களைத்திருந்ததால் கைதடி சந்தியில் இருந்த கடை விறாந்தையில் சற்று ஓய்வெடுத்தனர். சுகந்தனின் மிதி வண்டியில் சொல்லிவைத்தது போல காற்று இறங்கியிருந்தது.

நேராக கோப்பாய் வெளியை கடக்க வேணும். தூரத்தில் வெடிச்சத்தம் கூடியிருந்தது.

பின் கரியலில் கட்டியிருந்த பொதிகள் இரண்டும் சரிவது போல பிரமை. பாரில் இருந்த அம்மா அடிக்கடி "கால் விறைக்குதடா என்னக் கொஞ்சம் இறக்கி நிக்க விடு" என்று கேட்கும் போது கோப்பாய் வெளியில் ஒரிரு தடவை அவரை இறக்கி ஆசுவாசப்படுத்தினான்.

திரும்பித் திருப்பி பார்த்து உடலை வளைத்து கையால் சரிந்த பொதியை மாற்றப்பக்கம் இழுத்து நேராக்குவதை அடிக்கடி செய்து வந்தலால் நாரியில் வலி வேறு. அப்பாவும் தம்பியும் தமது பழைய மிதிவண்டிகளில் எதிர் காற்றுக்கு வலித்துக் கொண்டிருந்தனர்.

கைதடிச் சந்தி போய் கோப்பாய் வெளியை தாண்டிய போது சுகந்தனும் குடும்பமும் தங்கள் வலுவை இழந்திருந்தார்கள். தாகம் தீர்க்க ஒரு போத்தல் தண்ணீர் இருந்தாலும் அப்பாவுக்கு காலையில் தேத்தண்ணி குடிக்கவேணும். கைகள் நடுக்கத்தொடங்கிவிடும். அம்மா பிந்தி எலும்பினாலே அடுப்பில் கேத்திலில் தண்ணியை வைத்து அடுப்பை மூட்டிவிடுவார். சம்பிரதாயமாக காலைத் தேத்தண்ணி குடித்துப் பழகிய மனிதர். இல்லாவிடில் மூச்சு வாங்க உடல் சோர்ந்து விடும்.

முதலாக கோப்பாய் சந்தியில் பருத்தித்துறை பக்கம் மூன்று கடைகள் தாண்டியிருந்த சிறிய சாப்பாட்டுக்கு கடைக்கு முன்னால் நின்றான்.

கோப்பாய் சந்தியில் காலை ஊன்றிய போது சுள்ளென்று வலித்தது. தாகம் அடிவயிற்றில் பொருமி எழுந்த வாவு நெஞ்சை எரித்தது. ஒரு பிளேன்டி அடிச்சால் தான் புகைச்சல் அடங்கும். அப்பாவும் தம்பியும் தங்களின் சைக்கிள்களை அருகில் பாதையோர மின் கம்பத்தில் சரித்து நிறுத்தினர்.

அவர்களைக் கடந்து சாரை சாரையாக மக்கள் வண்டில்களிலும் சைக்கிள்களிலும் போயிக்கொண்டிருந்தனர். சிலர் பிள்ளைகளை கூட்டிக்கொண்டும் இடுப்பிலே குழந்தையைக் காவிக்கொண்டும் புழுதி எழும் பாதையில் உரும்பிராய்க்கும் வடமராட்சிக்கும் போகும் பாதைகளில் நடக்கிறார்கள். அவர்களின் தேவை ஒரு ஆறுதலாகவிருந்தது. அதை நோக்கியோ அல்லது தேடியோ போயிக்கொண்டிருந்தார்கள்.

இதுவரை காலத்தில் ஒருதடவை கூட இந்தக் கடைக்கு வந்ததில்லை. வரவேண்டிய தேவையும் இருந்ததில்லை. தானுண்டு தன் ஊருண்டு என்று பசை மாதிரி ஒட்டிக்கொண்டிருந்தவன். அரை மணி நேரம் அமைதியாக கடையோரக் குந்தில் இருந்து அடுத்தது என்ன என்ற கேள்வியில் போற வாற ஆட்களை பார்த்துக்கொண்டிருந்தனர்.

கடையில் நின்றவனின் தோற்றம் வேலை செய்பவனாக இருக்கவேண்டும் என்று புரிந்தது. ஆள் கருகருவென்ற சரியான வாடல். வெக்கைக்குள் இருந்ததால் அவனின் நிறம் இன்னும் கறுத்திருக்கலாம். கரியேறியிருந்த டீ சேர்ட் அதன் நிறத்தை இழந்திருந்தது. முழங்கால் அளவுக்கு காக்கி நிற காற்சட்டை அணிந்திருந்தான். சுகந்தனுக்கு இந்தக் கடை புதிது என்பதால் அந்நியமான முகம்.

அவன் தனது வேலையில் கண்ணாக இருந்தான்.

பொருக்கி நறுக்கிக் கணக்குப் பார்த்தால் சில்லறைக்காசு ஒம்பது ரூபாய் இருந்தது. நாலுபேருக்கு தேத்தண்ணி வாங்கக் காணுமா தெரியவில்லை. கெடுக்கவும் தயக்கமாக இருந்தது.

"நாலுபேரும் பங்கிட்டு குடிப்பம். உங்க எங்கினயன் கோயிலில இருந்து போட்டு மற்றத யோசிப்பம்" அப்பா அடுத்தது என்ன என்று பசியால் தொய்ந்த குரலில் சொன்னார்.

"என்ன இயக்கம் உள்ள இறங்கிட்டோ?" கேள்வியில் இருந்த ஆர்வம் கடையில் நின்றவனின் கண்களில் துடித்தது.

"செல் கிட்ட விழுகுது எவடம் வந்திட்டாங்கள் என்று தெரியேல" சுகந்தன் நிலவரம் தெரியாததை நாசூக்காக சொன்னான்.

"தனங்கிழப்போ?"

"இல்லை தச்சன் தோப்பு"

"ஆமி மாதிரி செல் அடிச்சுக் கொண்டு தான் மூபண்ணுறாங்கள் போல. விஷயமில்லாமல் செய்யமாட்டாங்கள்"

"கைதடிக்கு வந்தால் இங்கயும் செல் வருமென்ன?" சந்தேகத்துடன் கேட்டான் சுகந்தன்.

"அவங்களுக்கு பலாலி பிடிக்கிறது தான் பிளான். அரியாலைக்க இறங்கினவங்கள் கெதியா அந்தப் பக்கம் போனால் சோலியில்ல"

இன்னும் சனம் வந்து கடைக்குள்ள போய் சாப்பாடுகள் ஆர்டர் குடுக்க முதலாளி கூப்பிட்டார். அவன் உள்ளே ஓடினான்.

திரும்பி வந்தவன் "உங்களுக்கு டீ யோ பிளேன்டீயோ?" என்று கேட்டான்.

சுகந்தன் கையை விரித்து கையில் இருந்த ஒன்பது ரூபாயை பார்த்தவன்.

“பிளேன் டீ எவ்வளவு?” என்றான்.

“ஐந்து ரூபா”

“ஒன்பது ரூபா தான் இருக்கு. ரெண்டு பிளேன்டீ தாறீங்களே?” தயக்கமாக கேட்டான்.

முகத்தை சுளித்தவன் “எனக்குப் பிரச்சினையில்லை. அந்தாளிட்ட கேக்கவேணும். கொஞ்சம் பொறு கேட்டுட்டு வாறன்” என்று உள்ளே போனான்.

உள்ளே முதலாளியின் காட்டமான கத்தல் கேட்டது.

சற்று நேரத்தில் வெளியே வந்தான். “சரி உள்ள போய் குடு நான் போட்டுத்தாறன்” கடகடவென்று சுடுதண்ணியை அள்ளினான். இரண்டு பிளேன்டீ தர வேண்டா வெறுப்பா சரியென்று சொல்லியிருக்க வேண்டும்.

கடைக்கார பெடியன் ஆவிப்பறக்க கொதிக்கும் வெந்நீரை அள்ளி தேயிலை போட்ட பெரிய குவளையில் வார்த்தான். அடுப்பு தக தகவென்று பற்றி எரிந்து கொண்டிருந்தது. அளவாக நான்கு கரண்டி சீனியை கலந்து இன்னொரு குவளையால் இழுத்து ஆற்றினான்.

முன்னால் வீதியில் பாடசாலைக்குப் போகும் பிள்ளைகள் வெண்ணிற சீருடையில் உற்சாகமாகப் போயிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு சில கிலோ மீட்டர் தூரத்தில் நடக்கும் தாக்குதல்களை பற்றி அறிந்திருப்பார்கள். ஆனால் அதற்கான முக்கியத்துவம் அற்றதாக தமது அன்றாட வேலையில் யாழ்ப்பாண நகரப்பக்க சனம். இந்த வலிகாமத்தில் இருப்பவர்கள் பார்வையில் இவங்கள் ஏன் இந்தப்பக்கம் வாறார்கள் என்று வெறுப்பு இருப்பது போல சுகந்தனுக்குப்பட்டது. அப்பா சொன்னதில் உண்மை இருக்கும் போல என்றது உள்ளுணர்வு.

ஆவி பறக்க இரண்டு சில்வர் குவளையில் தேத்தண்ணியை வாங்கி அப்பாவிடம் ஒன்றும் அம்மாவுக்கு மாற்றதையும் கொடுத்தான். தம்பி அவனை முறைத்துப் பார்த்தான்.

அம்மா தம்பியிடம் “நீ முதலில் குடி” என்று நீட்டினார். பர பரவென்று ஊதிக் குடிக்கத் தொடங்கினான்.

அப்பாவுக்கு சூடு தாங்காமல் இரண்டு கையிலும் மாறி மாறிப் பிடித்து ஊதினார். சுகந்தன் பொறுமையாக ஆவி பறக்கும் தேத்தண்ணியை பார்த்துக்கொண்டிருந்தான்.

வலிகாமத்துக்குப் போய் சிலமாதங்களில் திரும்பி வரும் போது அப்பா அவர்களுடன் வரவில்லை. ஒரு பாடசாலை பிறகு தற்காலிகமா தங்கின வீடு என்று காலம் கடந்த போதே திடீரென்று இறந்து போனார். போதிய சாப்பாடு கிடைத்திருந்தால் அவர் தங்களுடன் திரும்பி வந்திருப்பார் என்ற வேதனை மட்டும் அவனுக்கிருந்தது. துரத்தப்படுவது கொல்வதற்காக மட்டுமல்ல பட்டினி போடுவதற்காகவும் தான் என்ற கசப்பான புரிதலை உணர்த்தியது.

“என்னடா தேத்தண்ணியை வேண்டி வடிவு பாத்துக்கொண்டிருக்கிறா. இஞ்ச தா” காந்தன் முன்னாலிருந்த கண்ணாடிக் குவளையை எடுத்து தேத்தண்ணியை உறிஞ்சத் தொடங்கினான். பல்கலைக்கழகத்தில் அவனது முதலாமாண்டு வகுப்புத்தோழன். விடுதியில் சுகந்தனுடன் ஒரே அறையில் தான் தங்கியிருக்கிறான்.

காந்தனின் காற்சட்டைப் பையில் இருந்த பெரிய மோட்டரோலா கைபேசி ரிங் பண்ணியது.

கைபேசியை எடுத்துக் பார்த்தவன். “அம்மாதான் நீ பேசு” என்று அவனிடம் கொடுத்தான்.

“ஹலோ”

“ஆர் கதைக்கிறது சுகந்தனே? உவன் இன்னும் எழும்பேலயோ?” என்று கேட்டார். பலதடவை பேசியதால் குரலை சட்டென்று மட்டுக்கட்டிவிட்டார்.

“இல்லை பாத்ரூம் போயிட்டான்”

“சரி தம்பி நான் பிறகு எடுக்கிறன். யாழ்ப்பாணத்தில நல்ல மழை பெய்யுது பிறகு லைன் கிடைக்குமோ தெரியாது. உங்க ஒண்டும் பிரச்சினை இல்லைதானே? வெளியில வெளிக்கிட்டு திரியாமல் காம்பஸ்சுக்க இருக்கிறது பாதுகாப்பு. ரத்மலானையில குண்டு வெடிச்சாப்பிறகு கலக்கமா கிடக்கு. சேந்திருந்தால் ஆளாளுக்கு உதவியா இருக்கும்”

அவர் அன்பானவர் என்பதை வந்த தொடக்கத்திலேயே புரிந்துகொண்டான். எப்போது அழைத்தாலும் அக்கறையோடு சுகந்தனையும் விசாரிப்பார். காந்தன் குடும்பம் யாழ்ப்பாணம் நல்லூரடியில் இருந்தது.

“வெளியில வெளிக்கிடுறேல. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதைங்கோ”

“சரி தம்பி நான் பிறகு எடுக்கிறன்” என்று அழைப்பைத் துண்டித்தார்.

காந்தன் தாயின் நச்சரிப்பு என்று சலிப்பாக ஒரு சிரிப்பை உதிர்த்தான். பாதி குவளை தேத்தண்ணியை விழுங்கியிருந்தான். அதிலிருந்து ஆவி பறக்கவில்லை. ஆறி அடங்கியிருந்தது. காந்தனைப் பார்க்க இவனுக்கோ வெறுப்பாக இருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை. அப்போதிருந்த ஒன்பது ரூபாயை மீண்டும் நினைவு படுத்திக்கொண்டான்.



# இடையினங்கள்

நீண்டதொரு முழக்கத்தோடு வந்து நின்றது அந்த இரயில்.

அந்த நகரின் முக்கிய இரயில் நிலையத்தின் காலைபொழுது மிகவும் பரபரப்பாக இருக்கும் பணிநிமித்தமாக செல்பவர்கள்,கல்லூரி மாணவ மாணவியர்கள்,ஊர்களுக்கு செல்பவர்கள் என்று இந்த இரயிலுக்காக காத்திருக்கும் பயணிகள் பட்டியல் சற்று நீளம் தான்.

இரயில்நின்றதும் இறங்கினாள் மீனா.அவளைப்போலவே இரயிலில் இருந்து இறங்கி சாரைசாரையாய் கடக்கும் பயணிகளை கடந்து இரயில் நிலையத்தை விட்டு வெளியேறினாள்.

அந்த ஊரின் பிரதான இரயில் நிலையம் என்றதும் இரயில் நிலையத்தை ஒட்டி ஏறாளமான கடைகள் நிரம்பியிருந்தது. சாலைகளின் இருபுறமும் அணிவகுத்திருந்த கடைகளை வேடிக்கை பார்த்தவாறே சென்றவளின் கவனத்தை ஈர்த்தது அந்தக்குரல்.

“அம்மா பசிக்கும்மா நாளு இட்டலி வாங்கித்தாங்க மா” என்றபடியே வருவோர்,போவோரை கெஞ்சிக்கொண்டு இருந்தான் அந்த பிச்சைக்காரன்.

மீனா அவனைக்கடக்க முயல்கையில் அவளிடமும் பிச்சைக்கேட்டான்.

போலியோவுக்கு தனது ஒரு காலை பறிகொடுத்தவன், இளைத்த தேகம் சவரம் பண்ணாத முகத்தில் காடுபோல ஒழுங்கற்று வளர்ந்திருந்த மீசையும் தாடியுமாய் பார்ப்பதற்கு பாவமாக தெரிந்தான். அனுபவமற்ற வயது,பருவ வயதுக்கே உண்டான அரைகுறை சமூக அக்கரை பெருக்கெடுக்க அவனிடம் பத்துரூபாய் நீட்டினாள் மீனா.

“அம்மா காசுலாம் வேண்டாம் மா, பசிக்குமா, நாளு இட்லி வாங்கி கொடுதாயி உனக்கு புன்னியமா போகும்” என்ற அவனின் வார்த்தையில் மயங்கியவள் அருகில் இருந்த உணவகத்தில் நாளு இட்லி பார்சல் வாங்கினாள். அவனிடத்தில் ஒப்படைத்தவள் அளப்பறிய சாதனையை புரிந்த இருமாப்பில் நடக்கலானாள்.

அவளை ஒட்டினார் போல இரு ஆடவர்கள் அவளை பின்தொடர்தனர். சற்று அவளை நெருங்கியவர்கள்.” மேடம் நா உங்கள கவனிச்சேன் அந்த பிச்சகாரனுக்கு சாப்பாடுவாங்கி குடுத்தீங்களே ரொம்ப நல்ல விஷயம் மேம் பாராட்டுறேன் ஆனா இனி வாங்கி குடுக்காதீங்க” என்றார்.

“ஏன் இப்படி சொல்லுறீங்க”

“நீங்க உண்மையிலேயே ஒரு அக்கரையில தான் வாங்கி குடுக்கீங்க ஆனா உண்மை என்னனா அவன் உங்கள ஏம்மாத்திட்டான். அவனுக்கு பக்கத்துல இருந்ததே ஒரு டிபன் கடை அந்த கடைக்கும் அவனுக்கும் லிங்கு உண்டு அவன் யாரு கிட்டயும் காசு கேக்க மாட்டான் அதுக்கு பதில் நாலு இட்லி கேப்பான் அவன் மேல இரக்கப்பட்டு வாங்கி குடுத்தீங்கனா அவன் அப்படியே நீங்க போனதுக்கு அப்பறமா திரும்ப அந்த கடைலயே குடுத்துட்டு மறுபடியும் பிச்ச எடுப்பான் . அந்த பார்சல் கடைல இருந்து உங்கள மாதிரி ஆளுங்ககிட்ட போயி , அவன் கிட்ட வரும். அவன் கிட்ட இருந்து மறுபடியும் அந்த கடைக்கே போயிரும் இப்படி ஆள் மாறி ஆள் மாறி அந்த பார்சல் போகுமே தவிர அதை சாப்பிட இவன் சாப்பிட மாட்டான் . இப்படி வர்ரவங்கள ஏமாத்தி இவன் அந்த கடைக்கு வியாபாரம் பாப்பான் இதுக்கு அவனுக்கு கமிசன் வேற அந்த கடைக்காரன் குடுப்பான்”. என்று சொல்லி முடித்தார்

இப்படியும் நடக்குமா என்று நம்பாமல் பார்த்தாள் மீனா.

எங்கள மாதிரி ரெகுலரா இங்க வர்ரவங்களுக்கு இவனுங்க தில்லுமுல்லு தெரியும் அதனால நாங்க யாரும் வாங்கி குடுக்க மாட்டோம் எங்க கிட்டையும் இவனுங்க கேக்கமாட்டானுங்க. உங்கள மாதிரி புதுசா வர்ரவங்க வெளியூர்ல இருந்து வர்ரவங்க தான் இவனுங்க டார்கெட்டு, இனி கொஞ்சம் கவனமா இருங்க மா. உதவிசெய்யுறது தப்பில்லை ஆனா இந்த மாதிரி திருட்டு பசங்களுக்கு பண்ணுறது நம்ம பணத்துக்கு வந்த கேடு” என்று கூறியவாரு இருவரும் மீனாவை தாண்டி சென்றனர்.

தான் செய்த உதவியை நினைத்து அதுவரை பூரித்து போனவளுக்கு பொக்கென்று இருந்தது அவர்கள் கூறிய தகவலால்.

ஒருவாராக தன்னை சமம் செய்து தான் வேலை பார்க்க போகும் நிறுவனமான பாபு எலக்ட்ரானிக்ஸ் என்ற கடைக்குள் நுழைந்தாள்.

டவுணின் பரபரப்பான மேம்பால சாலையில் அமைந்திருந்தது அந்த கடை. கடையில் மீனாவுடன் சேர்த்து ஐம்பதுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்தனர்.

அந்த கடையில் கணக்கர்வேலைக்கு வந்திருந்தாள். முதல் நாள் என்பதால் அவளுக்கு வேலையை பற்றி கூற ஏற்கனவே பணியில் இருந்த ராகிணியிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

பரஸ்பரம் அறிமுத்திற்கு பிறகு இயல்பாக இருவரும் உரையாட தொடங்கினர்.

மதிய உணவு இடைவேலையில் பேச்சுவாக்கில் மீனா காலையில் நடந்த சம்பவத்தைக்கூறினாள் ராகிணியிடம்.

“நீயும் ஏமாந்துட்டியா அந்த கஞ்சாபொறுக்கி கிட்ட” என்றாள் சிரித்தவாறே ராகிணி.

“என்னக்கா சொல்லுறீங்க கஞ்சாபொறுக்கியா” என்று அதிர்ச்சியில் வாயை பிளந்தாள் மீனா

“ஆமா அவன் ஒரு சரியான கஞ்சா பொறுக்கி, காலைல இருந்து மதியம் வரை அந்த டிபன் கடைல நிப்பான் அங்க அவன் கமிஷன் வாங்கி அடுத்த தெருல இருக்குற டாஸ்மார்க்ல சரக்கடிச்சிட்டு ரோட்டுல கிடப்பான். நானும் இங்க வந்த புதுசுல உன்னாட்டம் தான் இரக்கப்பட்டு அவனுக்கு உதவி செஞ்சேன். உனக்காது ஒரு மவராசன் எடுத்து சொன்னான் எனக்கு இந்த விவரம் தெரியாம

நானும் ஒரு ரெண்டு மாசமா அவனுக்கு தினமும் காலைல சாப்பாடு வாங்கி குடுத்துட்டு இருந்தேன்'' என்றாள் ராகிணி.

''அடப்பாவமே,ரெண்டு மாசமா?'' ஆச்சரியமாக கேட்டாள் மீனா

''ஆமா, இதென்ன பிரமாதம் இத விட சுவாரஸ்யமான பல விஷயம் இருக்கு சாய்ந்தரம் வேலை முடிஞ்சதும் பக்கத்துல இருக்குற அம்மன் கோவிலுக்கு போகலாம் வா அங்க வச்சு சொல்லுறேன்'' என்று கூறிவிட்டு வேலையை கவனிக்க தொடங்கினர்.

மணி ஆறு தொட்டதும் இருவரும் அருகில் இருந்த அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு சென்றனர். கோவில் நுழைவாயிலை அடையவுமே ''மாலை வேணுமாக்கா?'' என்றபடி வந்தான் ஒரு சிறுவன்.

''வேண்டாம் பா'' என்ற படி ராகிணி நடக்க தொடங்கினாள்.

சில அடிகள் எடுத்து வைக்கவும் மறுபடியும் ஒரு குரல் அவர்களை தடுத்தது. ''மஞ்சளா குங்குமம் வாங்கிட்டு போய் அம்மனுக்கு சாத்துங்க'' என்றபடி.

''பரவால்ல வேண்டாம் கா'' என்ற படி அந்த பெண்மனியை கடந்து சென்றனர் இருவரும்.

மெதுவாக மீனா ராகிணி காது கடித்தாள்'' அக்கா மொத தடவ வாரேன் கா மஞ்சள் குங்கும் மட்டுமாது வாங்கட்டுமா''

அதெல்லாம் வேண்டாம் வா'' என்று முன்னேறினிள் ராகிணி.

மறுபடியும் இடைமறித்து இதழ்விரியா தாமரை மலரை வாங்க சொல்லி வற்புறுத்தினாள் மற்றொரு பெண்.

'' பத்து ரூபாதாம்மா வாங்கிட்டுபோங்க கோவிலுக்கு போகைல சும்மா போகக்கூடாது'' என்ற விளக்கம் குடுக்க இந்த முறை மீனா வாங்கிவிட்டாள்.

ராகிணி எதுவுமா பேசாமல் அமைதியாக நடந்தாள். இருவரும் சுவாமி தரிசணம் முடித்துவிட்டு பிரகாரத்தில் அமர்ந்தனர்.

''ஏய் நான் தான் உன்ன எதுவும் வாங்காதனு சொன்னேன்ல அப்பறம் எதுக்கு பூ வாங்குன?''

''இல்லக்கா மொத தடவ கோவிலுக்கு வாறேன் அதான் வெறும் கையோட எப்படி வரனு வாங்குனேன் கா.''

''அடியாருடி இவ வெறும் கையோட வரக்கூடாதுனு எந்த சாமி உங்கிட்ட சொல்லுச்சு ''

''என்னக்கா இப்படி கேக்கிங்க'' என்றாள் மீனா

''வேற எப்படி கேக்க சொல்லுற, இங்க பாரு காலைல நீ வாங்கி குடுத்தியே நாளு இட்லி அதுமாதிரி தான் நீ இப்ப வாங்கி குடுத்த பூவும் ''.

''நிஜமாவா?''

''உங்கிட்ட பொய் சொன்னா எனக்கு என்ன லாபம் சொல்லு, இங்க எல்லாமே வியாபாரம் தான் நீ இங்க குடுத்த பூவ அப்படியே பூசாரி வெளிய குடுப்பாரு அது மறுபடியும் விற்பனைக்கு வந்துடும், அது மட்டும் இல்ல, இங்க நீ வாங்குற மஞ்சள் குங்குமம், பரிகார பொருட்கள் எல்லாமே இப்படி ரொட்டேஷன்ல மறுபடியும் விற்பனைக்கு வந்துடும் மறுசுழற்சினு நீ கேள்விபட்டுருக்கியா? அதோட உண்மையான அர்த்தத்தை இங்க பாக்கலாம், இவங்க பொருட்கள அழிக்காமா ஒளிச்சு வச்சு மறுசுழற்சி பண்ணுறவங்க''

''அப்பனா எல்லாருமே இப்படி தானாக்கா''

''எல்லாரும் இப்படி கிடையாது உண்மையாவே பசில கையேந்துறவங்களும் இருக்காங்க, கோவில் பூஜை பொருட்களை பயபக்தியோட விற்பனை செய்யுறவங்களும் இருக்காங்க. அவங்கள நாம தான் அடையாளம் கண்டுபிடிக்கனும் இல்லைனா இப்படி தான் நம்ம காசு வீணாகும்''.

''அது எப்படிக்கா எங்கயாது ஒரு இடத்துலனா கவனமா இருக்கலாம் எல்லா இடத்துலையும் கண்ணுல வெளக்கெண்ணைஊத்திக்கிட்ட பாக்க முடியும்? ''.

'' நீ வெளக்கெண்ணைலாம் ஊத்த வேண்டாம் கண்ண தொறந்து வச்சு பாரு போதும் போக போக உனக்கே எல்லாம் புரியும்''

''இப்படி ஒருத்தங்க நம்பிக்கையை வச்சு பொழைக்கிறது என்ன பொழப்போ''

'' வறுமையும், பசியும் ஒருத்தன என்னவேணாலும் செய்ய வைக்கும், உன்ன பொருத்தவரைக்கும் இது தப்பு ஆனா அவங்கள பொருத்தவரைக்கும் இது அவங்க வியாபார தந்திரம் அவ்வளவு தான். நம்ம கடையில மொத்த வியாபாரிகிட்ட இருந்து வாங்குற சரக்க அதே விலைலயா கஷ்டமருக்கு விக்கோம் இல்லையே இடையில நமக்கு லாபத்த வச்சுதான விக்கோம் அது மாதிரி தான் இதுவும் எல்லாதொழில்லையும் ஒரு இடையினங்கள்இருக்கும்.நீ ரொம்ப யோசிக்காத வா நாம போகலாம்''

மதுரா

# வளையற்சிந்து

வானமகள் வாசலிலே வந்தவுடன் இன்று - அது
வாழ்வினிக்கும் என்று- தினம்
வசந்தத்தைக் கொண்டு - அந்த
வாழ்வரசி தந்திடுவாள் வானளவு நின்று.


கெஞ்சிவரும் வேண்டுதலின் கிள்ளைமொழிப் பாட்டு -உள
மிரங்காதோ கேட்டு - உனக்
கேனிந்தப் பூட்டு - இனிக்
கிட்டாதோ உன்றனருள் இப்போதே நீட்டு.

செஞ்சுடரும் ஒளியும்போல் சேர்ந்திருக்க யின்று - என்
சிந்தனையை வென்று - மிகச்
சிறப்பாக நின்று - மனம்
சேர்ந்திசைக்கும் திருவடியில் சீர்பெறட்டு மென்று.

தஞ்சமென வந்திணையும் தரமான அன்பும் - அது
தழைக்கிறதே பின்பும் - இறைத்
தன்மையதன் முன்பும் - நாம்
தாள்களைப் பற்றுகின்றோம் தயைபுரிநீ என்றும்.

செஞ்சுடரும் ஒளியும்போல் சேர்ந்திருக்க யின்று - என்
சிந்தனையை வென்று - மிகச்
சிறப்பாக நின்று - மனம்
சேர்ந்திசைக்கும் திருவடியில் சீர்பெறட்டு மென்று.





# தாய்மை....,

**கா**ர் ஏர்போட்டை விட்டு கிராமம் நோக்கி விரைந்தது, நர்த்தனாவுக்கு அந்த கிராமச்சூழலே பிடிக்கவில்லை.., சிட்டியில், லிப்டில் பயணித்து அப்பாவுடன் காரிலும்.., மற்ற நேரங்களில் தோழிகளுடனும்.., ஸ்கூட்டியில் நகரத்தையே வலம் வரும் அவளுக்கு காபி கபே பீட்சா கார்னர் என சாப்பிட்டு ஜாலியாக சிட்டுக் குருவியாய் சிறகடிப்பவளுக்கு,

திருமணம் என்ற பந்தத்தில் தன்னை பெற்றோர்கள், இணைத்து விட்டதும், கணவன் முகுந்தனின் அரவணைப்பும்.., பிடிக்கவில்லை. தாய், தந்தையிடம் எரிந்து விழுந்தாள். தோழிகள் சுதந்திரமாக உலா வர.., தான் மட்டும் கல்யாணம் என்ற சகதியில் மாட்டிக் கொண்டோமே..,?? அப்பா ரங்கராஜன் நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவரை எதிர்த்து பேச தைரியம் இல்லை.

மூன்று மாதங்களுக்கு முன்பு தான் முகுந்தனுக்கும் நர்த்தனாவுக்கும் திருமணம் முடிந்திருந்தது. அவனும் நகரில் ஒரு அபார்ட்மெண்டில் தங்கி இருக்கிறான். அவன் சொல்லி இருக்கிறான். அடிக்கடி..,

கிராமத்தில் தன்னுடைய தாத்தா, பாட்டி, பண்ணைவீடு, தோட்டம்..,அதன் செழிப்பு என அவன் சொல்லிக்கொண்டு போக.., ஆனாலும், எதையுமே கேட்காதவள் போல இருப்பாள் நர்த்தனா. அவள் எதிலும் ஒரு பிடிப்பில்லாமல் இருக்க.., அவன் அம்மா "ஒரு வாரம் கிராமம் போயிட்டு வாங்கப்பா" என அனுப்பி வைத்தாள். முகுந்தின் கிராமம் என்றதும் ஒன்றும் பேசாமல், அவனிடம் இன்னும் அதிகமாக எரிச்சல் பட்டாள்.

கிராமம் என்றாலே படிப்பறிவு இல்லாத மக்களும் சுகாதார மற்ற இடங்களும் தான் அவள் கண் முன் விரிந்தது.

ஏர்போர்ட்டில் இருந்து விடிகாலை நான்கு மணிக்கு. வீட்டிற்கு வந்து இறங்கியதும்.., குளித்து வந்ததும் பாட்டி ஆவி பறக்க காபி கொடுத்தாள். அந்த சுவை வித்தியாசமாக தெரிந்தது நர்த்தனாவுக்கு.

அதற்குள் லேசாக விடிந்திருந்தது.

பாட்டி பெருமையாய் நர்த்தனாவை வீட்டிற்கு வெளியே அழைத்து வந்தாள். முற்றத்தில் பாட்டி தெளித்த சாணத்தின் வாசனை, லேசாக காற்றில் கலந்து வீசியது.

பாட்டி போட்ட கோலத்தின் நடுவே.., பூசணிப்பூ புன்னகையாய் சிரித்தது. ஆச்சரியமாய் பார்த்தாள், நர்த்தனா. இது எல்லாம் ரொம்ப புதுசு நர்த்தனாவுக்கு.

ஒரு பக்கம் கிணறு..,பக்கத்தில் பழுத்து தொங்கும். பலாமரம், வேம்பு, செம்பருத்தி, செவ்வந்தி, சந்திரகாந்தா, இருவாட்சி கொடி, துளசி.,டிசம்பர் பூ என பல வண்ண பூக்கள்..!

பாட்டி பண்ணை வீட்டில் மாடிப்பகுதியை ஒதுக்கி இருந்தாள். நர்த்தனாவுக்கு., மாடியில் வந்து சன்னல் வழியாக, வெளியே பார்த்தாள். பலாப்பழம் பழுத்து அணில்கள் சூழ்ந்து கொள்ள.., சிட்டுக் குருவிகளும், மற்ற பறவைகளும் கூடவே சேர்ந்து கொத்தி கொண்டிருந்தன. மணம் நாசியில் ஊடுருவியது.

புது அனுபவமாக இருந்தது. அவளுக்கு. பாட்டி அழைத்தாள் நர்த்தனாவை.

"என்னப்பா குளிச்சிட்டியா..,? முகுந்தை சாப்பிட அழைச்சிட்டு வா என்றாள்.டைனிங் டேபிளில் புட்டும், கூடவே பாசிப்பயறும் அப்பளமும்.., முகுந்து "வாவ் பாட்டி.., சூப்பர்"" என்றபடி சர்க்கரையை தூவி. "பிரமாதம் பாட்டி.., " எக்ஸலன்ட் ' என சாப்பிட ஆரம்பித்தான்.

நர்த்தனா எப்படி சாப்பிட..,? குழம்பினாள்..""பாட்டி.., நாளையிலேருந்து நர்த்தனாவுக்கு பிடித்த டிபன் பண்ணு பாட்டி..," முகுந்த் சொன்னான். இவள் மாம்பழங்களையும், பலாவையும் ருசி பார்த்தாள்.

இவள் மேலே வந்தபோது முகுந்த் தூங்கியும் விட்டான். நர்த்தனாவும் பயணக் களைப்பில் தன்னை மறந்து தூங்க ஆரம்பித்தாள்.

நர்த்தனா விழித்தபோது.., படபடக்கும் இறக்கை சப்தங்கள்,சின்ன, சின்ன கொஞ்சல்கள். மெதுவே எழுந்து..,மாடியின் சன்னல் வழியாக வெளியே பார்வையை..,திருப்பினாள்.

சன்னல் பக்கமாக..,பலா மரத்துக்கிளை ஒன்று சாய்வாக படர்ந்திருக்க., அதில் பஞ்சுபொதி போல் ஒரு கூடு. உள்ளே வருவதும் போவதுமாக இரண்டு சிட்டில்கள்.

மஞ்சள் கலந்த சாம்பல் கலரும் கலந்த கலவையில்.., இரண்டும் கிளைகளில் உட்காருவதும் பறப்பதுமாக இருந்தது. எங்கேயோ சேகரித்த பஞ்சுகளும், நார்களும்,தேங்காய் சவுரிகளும் இடத்தை அடைத்திருக்க..,மூன்று முட்டைகள் உள்ளே.., குருவிகள் எந்நேரமும் வரலாம்.!!

மெல்ல விலகி கொண்டே கவனித்தாள் நர்த்தனா.

முகுந்தை மணமுடித்தப் பிறகு, ஆபீஸ் போவதும் வருவதுமே, சரியாக இருந்தது. முகுந்த் இவளிடம் நெருங்கி வரும் போதெல்லாம் வெறுப்பை காட்டினாள் நர்த்தனா. இயந்திர வாழ்க்கையாகி போனது இருவருக்கும்.., "திருமணம் என்ற பந்தமே.., தேவையில்லாத ஒரு நரகம்"" தங்கையிடம் கோபமாய் பேசியிருக்கிறாள்.

இதில் குழந்தை பற்றி யோசிப்பதே பெரிய விஷயமாக இருந்தது "ச்சே கல்யாணமானா.., குழந்தைங்க மட்டும் தானா.., வாழ்க்கை..,?? அம்மாவிடம், பல முறை.., எரிந்து விழுந்தது ஞாபகம் வந்தது.!!

நான்கு நாட்கள் கடந்து போனது தினமும் சிட்டுக்குருவிகளின் கூட்டை பார்ப்பதே வேலையாகி போனது நர்த்தனாவுக்கு...

அன்று வித்தியாசமான சில சப்தங்கள், விடிகாலையே விழித்து,விட்டாள் நர்த்தனா. சன்னல் வழியே பார்வையை விட்டாள்.

சின்ன செப்பு உதடுகள். குருவியின் முகத்தில் ஒரு சின்ன பிளவு போல அவ்வப்போது திறந்து, திறந்து மூட அற்புதமாக இருந்தது. ''என்ன ஒரு உலகம். ஒன்று தாயைப்போல.., ஒன்று தந்தைப்போல.., இன்னொன்று வால் குட்டியோ..,? வித்தியாசமாய் கண்சிமிட்டியது.!

கொள்ளை பிரியத்துடன் பார்த்து கொண்டிருந்தாள் நர்த்தனா. அன்று இரு குருவிகளுமே ரொம்ப உற்சாகமாய்.., இங்கே ஒரு உலகம் இயங்கி கொண்டிருக்க..,அந்த ஐந்து பேர் மட்டுமே புது உலகம் போல..,குஞ்சுகளோடு அளவளாவி கொண்டிருந்தது. ஆச்சரியத்தின் நுனியில் இருந்தாள் நர்த்தனா.!

நர்த்தனா கீழே இறங்காமலே காத்திருந்தாள். பாட்டியும் இரண்டு முறை அழைத்துப் பார்த்து விட்டாள். மேலே வந்து வெண்பஞ்சு இட்லியும், சாம்பாரையும்,சட்னியையும் வைத்து விட்டு போனாள்.

ஒன்றோடொன்று முகம் உரசி.., ஏதேதோ கதைகள் பேசி.., அங்கே ஒரு தாயின் அரவணைப்பையும்.., தந்தையின் போற்றுதலையும் நேரிலே கண்டாள். அவள். கண்கள் குளமானது. அம்மாவின் ஞாபகம் வந்தது.

"ஐந்தறிவு ஜீவனுக்கே தெரியும் பாசம் கூட, பல்கலையில் பயின்ற எனக்கு கூட தெரியாமல் போச்சே.., ச்சே..,

மாலை.., முகுந்த் வீட்டிற்குள் நுழைந்த போதே "''நர்த்தனா, நாளைக்கே டிக்கெட் போடலான்னு இருக்கேன். நீயும் இரண்டு நாளா..,மாடியிலே இருக்கே.., கிராமத்துக்கு வந்ததே உனக்கு பிடிக்கல.., சோ..,'''' என்றவனின் முன்னே வந்து நின்றாள்..., "'என்னங்க பாட்டி வீடு.., எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு..இன்னும் ஒரு வாரம் கூட இருந்திட்டு போலாமே..,?

"என்ன நர்த்தனா சொல்றே..,?'' ' முகுந்த் கண்கள் சுருக்கி.., பாட்டியை பார்த்தான். பாட்டி நான் இல்லை.., என தலையாட்டினாள்.

அந்த இயந்திர வாழ்க்கையில் இருந்து எனக்கு ஒரு மாறுதல் கிடைச்சிருக்கு.., முகுந்த். பிளீஸ், ஒரு வாரம் எனக்காக...,கண்கள் கெஞ்ச சொன்னாள்.

"சரி உன்னிஷ்டம் நர்த்தனா.'' இப்பவே ஆபீஸ்க்கு, கால் பண்ணி ஒன் வீக் லீவு சொல்லிடுறேன்.'''' அத்தையிடமும் பேசிடுறேன்.'''' அவன் கைகளை பிடித்து சந்தோசமாய் குதித்தாள். பின்..,

மெல்ல அவனிடம் காதலாய் சரண்டைந்தவளை...,அணைத்துக் கொண்டான் முகுந்த். பாட்டி.., சிரித்தபடி மாடியை விட்டு கீழிறங்கி மல்லிகைப் பந்தலை நோக்கி நடந்தாள்.!!

ரகுநாத் வ, மதுரை

# எட்டுக்கால் பூச்சிக்கு ஆயிரம் காதலர்கள்

காற்றுச் சாளரத்தோடு
கூண்டுகளைக் கட்டமைக்கிறது
இரட்டைவால் தரித்த
தனித்த குருவி


கூடிப்பேசுவதற்காகத்
தரையிடம் மண்டியிடுகிறது
காலுடைந்த நாற்காலி

ஓடிக்களைத்த நீரின்
ஈரக்கால்களுக்குத் தலையில்
இடமளிக்கிறது கூழாங்கல்

எதிரிலிருக்கும் இணையினைத்
தொடவியலாத கிளைகளோடு
துயரிலிருக்கிறது ஆலமரம்

நிலமூறியிறந்த
எட்டுக்கால் பூச்சிக்கு மட்டுமே

சுற்றிலும் நிற்கின்றனர்
ஆயிரங்காதலர்கள்!



# தேவைகள் மாறுகின்றன

இன்றும் வழமைபோல் காலை ஐந்து மணிக்கு எழும்பி காலைக் கடனை முடித்து,

வேலியில் நிற்கும் பூவரசு மரத்தில் தடி ஒன்றையும் பல் தீட்டுவதற்காக முறித்துக்கொண்டு

கிணற்றடிக்குப் போனேன். முகம் கால்களை நன்றாகக் கழுவிக்கொண்டு, தோளில் கிடந்த துவாயினால் துடைத்தபடி, துவிச்சக்கர வண்டியின் சில்லுகளின் காற்றினையும், ஒருதரம் உறுதி செய்தபடி வெளித்திண்ணையில் வந்து உட்கார்ந்தேன்.தேநீருடன் வந்த மரகதம், என்னருகே தேநீரை வைத்துவிட்டு, என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏதோ யோசனைகளிலிருந்து விடுபட்டு நிமிர்ந்து நான், அவளது தோற்றத்தைக் கண்டு

கவலையடைந்தேன்

முப்பதே வயதுதான். இந்த ஐந்து வருட இடப்பெயர்வுக்குள், முகமும் பொலிவிழந்து, துரும்பாக உருமாறிப் போனாள். என்னால் இயன்றளவு உழைக்க முடிந்தும், அவளது முழு வயிற்றுக்கும்

உணவு கொடுக்க முடியவில்லையே என்ற வேதனை என் இதயத்தில் எங்கோ

இரும்புத் துண்டால் அடிப்பது போன்று இருந்தது.

என்னப்பா என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறியள் தேத்தண்ணீர் ஆறுது.

சுடச் சுடக் குடியுங்கோ, என்று சொல்லிவிட்டுக் குசினுக்குள் போனவள், இரவு

சமைத்துவைத்த உணவின் ஒரு பகுதியை பார்சலாகக் கட்டி, அத்தோடு ஒரு

பிளாஸ்ரிக் போத்தலில் தண்ணீரும் எடுத்து, சைக்கில் முன் கரியரில் வைத்துவிட்டு,

துவாய் ஒன்றினால் அதை மூடியபடி மீண்டும் திண்ணைக்கு வந்தாள். தேநீர் குடித்துக்கொண்டிருந்த என்னிடம் அப்பா சொல்லுறன் எண்டு குறை விளங்காதையுங்கோ, படைத்தவன் படி அளப்பான். அதுவரை கிடைக்கிறதை வைத்துச்

சமாளிப்பம்.கனக்க விறகுவெட்டவேணும் எண்டு ஆசைப்படாதையுங்கோ. நேரகாலத்துக்கு வீட்டுக்கு வந்து,பிள்ளைகளோடை இருந்தால்,அதுகளுக்கும் கொஞ்சம்

சந்தோசம்.உங்களுக்கும் ஆறுதலாக இருக்கும். ஏன் மனதுக்குப் பட்டதைச் சொன்னன்

என்றவள் குனிந்தபடியே நிற்க மரகதம் நான் வேணும் எண்டோ நேரம் பிந்தி

வாறன். கொஞ்சம் விறகு கூடவெட்டினால் இரண்டும் சின்னப் பிள்ளைகள் பால் கொஞ்சம் கூடவாங்கிக் கொடுக்கலாம். சரி இண்டைக்கு வெள்ளனவே வாறன். என்று சொல்லிவிட்டு மரகதம் மூத்தவனுக்கு நாலு வயது தானே. விபரம் தெரியாத பிள்ளை. தெரிந்தும் தெரியாமல் கிணற்றடிப் பக்கம் போக விட்டுடாதை. நான் வாறன் என்றபடி சைக்கிலையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்து

சிறிது நேரம்தான் நின்றிருப்பேன் .

என்னோடு விறகு வெட்டும் கூட்டாளிகளின் சைக்கில் சத்தங்கள் அருகி வருவது தெரிந்தது.

குலதெய்வத்தை வேண்டியபடி சைக்கிலில் ஏறினேன். எல்லோரும் வரிசையாக அந்த மணற் பாதையால் போய்க்கொண்டிருந்தோம். அரைமைல் தூரம் போனால் தான் தார் போட்ட றோட்டு வரும்.அது பருத்தித்துறை- கொடிகாமம் வாகனங்கள் செல்லும் பாதை. அந்தப் பாதையூடாகக் கிட்டத்தட்ட ஏழு மைல் தூரம் ஓடினால், முள்ளிக்கும் வரணிக்கும் இடையில் அந்தப் பற்றைக் காடுகள் வரும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நடைபாதைக்குள் இறங்குவோம்சில நாட்களில் றோட்டுக்கு அருகிலேயே சிறிய தூரத்தில் பற்றைகள் அகப்படும். பல நாட்கள் தூர நடக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. இன்றும் எல்லோரும் திக்குத் திக்காக ஒவ்வொரு பாதைக்குள் இறங்கினோம். இன்று நல்ல இராசிபோலும். ஒரு பெரிய பற்றை,நிறைய வேர்களுடன் கண்ணில்பட்டது. வெயில்

ஏறுவதற்குள் எப்படியாவது வெட்டி விடவேண்டும் என்ற ஆசையால் களைப்பையும் பொருட்படுத்தாது வெட்டி, பத்து மணிக்கு முன்பே ஒரு பெரிய சுமையைச்

சேர்த்து விட்டேன். அவைகள் எல்லாவற்றையும் வடிவாக அடுக்கி,

சைக்கிளில் இறுகக் கட்டி முடித்ததும், ஓடும் போது அவைகள் கீழே விழுமா என, ஒரு தரம் சைக்கிலை ஆட்டி இல்லை என்பதை உறுதி செய்து விட்டு மற்றவர்களது விசில் சத்தம் வரும்வரை, ஒரு மரத்தின் கீழே இருந்து, மடியிலிருந்த

வெற்றிலையை சிறிது போட்டுக் கொள்ளவும்,விசில் சத்தமும் கேட்டுவிட எல்லோரும் பிரிந்த இடத்துக்கே வந்து சேர்ந்து விட்டோம்.

எனது விறகுக் கட்டின் அளவைப் பார்த்த கூட்டாளி சுந்தரம் உனக்கு இன்று அதிஸ்ட இலாபச் சீட்டு விழுந்திருக்கு.நல்ல விலைக்கு விறகு போகும் என்று சொன்னதும், எனக்கும் உள்ஊர சந்தோசமாகவே இருந்தது.இன்று விறகு விற்கும் காசில் பாலும், வறுத்த விசுக்கோத்தும் வாங்கிக் கொண்டு போக வேணும் என நினைத்தபடி, றோட்டை நோக்கி முன்னேறினோம். றோட்டும் வந்தது. எல்லோரும் ஆளுக்கு ஆள் கதைத்த படியே முள்ளியை நோக்கி உழக்கிக் கொண்டிருந்தோம். ஒரு மைல்தானும் போயிருக்கமாட்டோம் எதிர் திசையில் இருந்து வாகனங்களும், சைக்கிள்களும் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தன. ஏது நடந்தது

என்று தெரியாமல் எல்லோரும் திகைக்க, வான் சாரதி ஒருவன் மறித்துச் சொன்னான் முள்ளிச் சந்தியிலை பொடியன்களை ஆமி சுத்தி

வளைச்சிட்டாங்கள்.பொடியங்களும் அடிச்சுக் கொண்டு இருக்கிறாங்கள்.எல்லாரும் வறணியை நோக்கி திரும்பிப் போங்கோ, சொல்லிவிட்டு வாகனமும் ஓடி

மறைந்தது.எல்லோரும் றோட்டுக்குப் பக்கத்தில் உள்ள பற்றைக்குள் விறகுக் கட்டைகளைத் தள்ளிவிட்டு வரணியை நோக்கி சைக்கிளைத் திருப்பினார்கள்.

எனக்கு மட்டும் இந்த விறகுக் கட்டை இழக்க மனம் மறுத்து விட்டது. எப்படியும் இந்த விறகோடு வீடு சேர்ந்துவிட வேண்டும் என்ற மன அங்கலாய்ப்பில், சைக்கிளை வலது கைப்பழக்கமாகத் திருப்பி வண்டில்

பாதைகள் ஊடே ஓடத் தொடங்கினேன்.அந்தப் பெரிய வயல் வெளிகளைத்

தாண்டி, அந்தணன் திடல் போய்ச் சேர்ந்தால், அங்கிருந்து சாவகச்சேரி- பருத்தித்துறை வீதி வழியாக எப்படியாவது வீடு போய்ச் சேருவேன் என்ற துணிவில், சைக்கிளை முடிந்தளவு ஓடுவதும், முடியாத கட்டத்தில் இறங்கி உருட்டுவதுமாக, அரைவாசி வயல் வெளியைக் கடந்து விட்டேன்.குளம் ஒன்று கண்களில்பட, களைப்பும் பசியும் என்னை உறுத்த, சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு, குளத்தில் எனது கை கால்களைக் கழுவிவிட்டு, வரம்பு ஒன்றில் இருந்தபடி, பார்சலைப் பிரித்து உண்ணத்தொடங்கினேன். முருங்கக்காய் குளம்பும், செத்தல் மிளகாய்ச் சம்பலும் அந்த நேரத்தில்

பஞ்சாமிர்தம் போன்றே என் நாவுக்குத் தெரிந்தது. சாப்பாடு முடிந்ததும் கைகளைக் கழுவி தண்ணீரும் குடித்தபிறகு, மடியில் இருந்த வெற்றிலை ஞாபகத்திற்கு

வர, வெற்றிலையும் போட்டுக் கொண்டேன். சூரியனைப் பார்த்ததும் என்னுள் அவசரம் ஆட்கொண்டது.

திரும்பவும் குலதெய்வத்தை வேண்டியபடி, சைக்கிளை உருட்டத்

தொடங்கினேன்.மதியம் நான்கு அல்லது ஐந்து மணி இருக்கலாம்.

நேரமும் சரியாகத் தெரியவில்லை. உருட்டுவதும் ஓடுவதுமாக

சாவகச்சேரி பருத்தித்துறை வீதியை வந்தடைந்தேன். இந்த ஐந்து மைல்

பயணத்தில்என் கால்களும் கைகளும் செயலிழந்த நிலையில்தான்

இந்தத் தார் றோட்டை என் கண்கள் கண்டன.இனியும் இந்த றோட்டால் குறைந்தது எட்டு மைல்களாவது ஓட வேண்டும்.என்னை மறந்த நிலையில், பிள்ளைகளின் நினைவோடு எனக்கு மட்டும் இந்த விறகுக் கட்டை

இழக்க மனம் மறுத்து விட்டது.

எப்படியும் இந்த விறகோடு வீடு சேர்ந்துவிட வேண்டும் என்ற மன

அங்கலாய்ப்பில், சைக்கிளை வலது கைப்பக்கமாகத் திருப்பி வண்டில்

பாதைகள் ஊடே ஓடத் தொடங்கினே;.அந்தப் பெரிய வயல் வெளிகளைத் தாண்டி, அந்தணன் திடல் போய்ச் சேர்ந்தால், அங்கிருந்து சாவகச்சேரி- பருத்தித்துறை வீதி வழியாக எப்படியாவது வீடு போய்ச் சேருவேன் என்ற துணிவில், சயிக்கிளை முடிந்தளவு ஓடவதும், முடியாத கட்டத்தில்

இறங்கி உருட்டுவதுமாக, அரைவாசி வயல் வெளியைக் கடந்து விட்டேன்.குளம் ஒன்று கண்களில்பட, களையும் பசியும் என்னை உறுத்த,

சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு, குளத்தில் எனது

கை கால்களைக்

கழுவிவிட்டு, வரம்பு ஒன்றில் இருந்தபடி, பார்சலைப் பிரித்து உண்ணத்தொடங்கினேன். முருங்கக்காய் குளம்பும், செத்தல் மிளகாய்ச் சம்பலும்

அந்த நேரத்தில் பஞ்சாமிர்தம் போன்றே என் நாவுக்குத் தெரிந்தது. சாப்பாடு முடிந்ததும் கைகளைக் கழுவி தண்ணீரும் குடித்தபிறகு, மடியில்

இருந்த வெற்றிலை ஞாபகத்திற்கு வர, வெற்றிலையும் போட்டுக் கொண்டேன். சூரியனைப் பார்த்ததும் என்னுள் அவசரம் ஆட்கொண்டது.

திரும்பவும் குலதெய்வத்தை வேண்டியபடி, சைக்கிளை உருட்டத்

தொடங்கினேன்.மதியம் நான்கு அல்லது ஐந்து மணி இருக்கலாம். நேரமும் சரியாகத் தெரியவில்லை. உருட்டுவதும் ஓடுவதுமாக சாவகச்சேரி பரித்தித்துறை வீதியை வந்தடைந்தேன்.இந்த ஐந்து மைல் பயணமும் என்

கால்களும் கைகளும் செயலிழந்த நிலையில்தான் இந்தத் தார் றோட்டை என் கண்கள் கண்டன.இனியும் இந்த றோட்டால் குறைந்தது

எட்டு மைல்களாவது ஓட வேண்டும்.என்னை மறந்த நிலையில், பிள்ளைகளின் நினைவோடு எனக்கு மட்டும் இந்த விறகுக் கட்டை இழக்க மனம் மறுத்து விட்டது. எப்படியும் இந்த விறகோடு வீடு சேர்ந்துவிட வேண்டும் என்ற மனஅங்கலாய்ப்பில், சைக்கிளை வலது கைப்பக்கமாகத் திருப்பி வண்டில் பாதைகள் ஊடே ஓடத் தொடங்கினே;.அந்தப் பெரிய வயல் வெளிகளைத் தாண்டி, அந்தணன் திடல் போய்ச் சேர்ந்தால், அங்கிருந்து சாவகச்சேரி பருத்தித்துறை வீதி வழியாக எப்படியாவது வீடு போய்ச் சேருவேன் என்ற துணிவில், சயிக்கிளை முடிந்தளவு ஓடவதும், முடியாத கட்டத்தில் இறங்கி உருட்டுவதுமாக, அரைவாசி வயல் வெளியைக் கடந்து

விட்டேன்.குளம் ஒன்று கண்களில்பட, களையும் பசியும் என்னை உறுத்த,

சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு, குளத்தில் எனது கை கால்களைக்

கழுவிவிட்டு, வரம்பு ஒன்றில் இருந்தபடி, பார்சலைப் பிரித்து உண்ணத்

தொடங்கினேன். முருங்கக்காய் குளம்பும், செத்தல் மிளகாய்ச் சம்பலும்

அந்த நேரத்தில் பஞ்சாமிர்தம் போன்றே என் நாவுக்குத் தெரிந்தது.

சாப்பாடு முடிந்ததும் கைகளைக் கழுவி தண்ணீரும் குடித்தபிறகு, மடியில்

இருந்த வெற்றிலை ஞாபகத்திற்கு வர, வெற்றிலையும் போட்டுக்

கொண்டேன். சூரியனைப் பார்த்ததும் என்னுள் அவசரம் ஆட்கொண்டது.

திரும்பவும் குலதெய்வத்தை வேண்டியபடி, சைக்கிளை உருட்டத்

தொடங்கினேன்.மதியம் நான்கு அல்லது ஐந்து மணி இருக்கலாம். நேரமும்

சரியாகத் தெரியவில்லை. உருட்டுவதும் ஓடுவதுமாக சாவகச்சேரி-

பருத்தித்துறை வீதியை வந்தடைந்தேன்.இந்த ஐந்து மைல் பயணத்தில்

என் கால்களும் கைகளும் செயலிழந்த நிலையில்தான் இந்தத் தார்

றோட்டை என் கண்கள் கண்டன.இனியும் இந்த றோட்டால் குறைந்தது

எட்டு மைல்களாவது ஓட வேண்டும்.என்னை மறந்த நிலையில், பிள்ளைகளின் நினைவோடு சைக்கில் ஓடிக்கொண்டே இருந்தது. ஐந்து மைல்கள் அளவு தூரம் சென்றிருப்பேன் என நினைக்கிறேன். ஆந்தப் பாதையால் போனவர்கள் சொன்ன செய்தி, என் தலையில் மேலும் இடி விழுந்தது போல் இருந்தது. ‘ஆமிக்காரங்கள் அந்த சந்தியைநோக்கி பின் வாங்கிக் கொண்டு வாறாங்கள். நீங்கள்உந்தவயல் வெளிக்குள்ளாலை போனால், ஊர் மனைக்குள்ள போயிடலாம். க்கில் ஓடிக்கொண்டே இருந்தது. ஐந்து மைல்கள் அளவு தூரம் சென்றிருப்பேன்

என நினைக்கிறேன். ஆந்தப் பாதையால் போனவர்கள் சொன்ன செய்தி, என் தலையில் மேலும் இடி விழுந்ததுபோல் இருந்தது. ‘ஆமிக்காரங்கள் அந்த சந்தியைநோக்கி பின் வாங்கிக் கொண்டு வாறாங்கள். நீ

ங்கள்உந்தவயல் வெளிக்குள்ளாலை போனால், ஊர் மனைக்குள்ள போயிடலாம். சைக்கில் ஓடிக்கொண்டே இருந்தது. ஐந்து மைல்கள் அளவு தூரம்

சென்றிருப்பேன் என நினைக்கிறேன். அந்தப் பாதையால் போனவர்கள் சொன்ன செய்தி, என் தலையில் மேலும் இடி விழுந்ததுபோல் இருந்தது.

மேலும் சோதனையா எண்ணிய நான் மீண்டும் வயல் வெளியென்றும் தோட்ட வெளியென்றும் பலதைக் கடந்து, கால்களும் கைகளும் செயலிழந்த அந்த

நிலையிலும், இந்த விறகோடு நான் வீடு செல்லவேணும் என்ற முனைப்போடு, எட்டு

மணி இருக்கும் என நினைக்கிறேன் ஒருவாறு ஊர்மனைக்குள் நுழைந்து கொண்டேன்.பாதைகளும் சரியாகத் தெரியவில்லை.நிலவு வெளிச்சத்தின் துணையோடு, சிறிய சிறிய ஒழுங்கைகளுக்கூடாக, பாதைகளில் தென்படுவோரிடம் போகும் வழிகளை அறிந்தபடி இருட்டோடு இருட்டாகப் போய்க்கொண்டிருக்கையில், மேலும் ஒரு சோதனை என்னைச் சூழ்ந்தது.ஆமாம், என் சைக்கிளின் பின் சில்லில்

என்ன குற்றியதோ தெரியவில்லை, காற்றும் போ ய்விட்டது.

உடனடியாக சைக்கிளை நிறுத்தினேன். விறகின் சுமையை இறக்கினேன்.

சக்கரத்தின் இரும்பு வளையம் வளைந்தால் அதை வாங்குவதற்கு குறைந்தது

நான்கு நாட்களாவது உழைக்க வேண்டும்.ரியூப் காற்றுப் போனால் ஒட்டிக்

கொள்ளலாம் என்ற எண்ணத்துடன், பக்கத்தே தெரிந்த வேலியில் இருந்த

மரத்தின் இலைகளை உருவி வட்டமாக சும்மாடு போன்று தயாரித்து விறகைத் தலையில் வைத்து ஒரு கையால் பிடித்தபடி, மறுகையால்

சைக்கிளையும் ஒருவாறு உருட்டிக் கொண்டு இரவு பத்துமணி இருக்கும் படலைக்கு வந்து சேர்ந்தேன்.சைக்கிளை வேலியோரம் சாத்திவிட்டு, படலையைத் திறந்து கீழே காவோலை இருப்பது தெரியாமல் அதற்கு மேலே

விறகுக்கட்டைப் போட்டேன். அந்தச் சத்தத்திலை பார்த்தால் ரோந்து

போய்க்கொண்டிருந்த இராணுவம் சந்தேகம் ஏற்படவே, சத்தம்வந்த என்

பக்கமாகப் படபடவெனச் சுட்டபடியே இரந்தார்கள். இரத்தம் ஆறாக ஓடிய

நிலையில் விறகுக் கட்டின் மேல் வீழ்ந்தேன்.விற்பதற்காக ஆசையுடன் வீடு

சேர்ந்த அந்த விறகு,என் கடைசிநேர தேவைகளுக்கு தேவைப்பட்டதா என்பதை நான் உயிரோடு இருந்தாலல்லவா அறிந்திருக்க முடியும்..

க. புனிதன்

# செல்லுலாய்டு சித்திரம்

கோடாரிக் காம்பாகவும்
மரமாகவும் இருக்கிறேன்

சிலையாகவும்
பாறையாகவும்
இருக்கிறேன்

பனிக் கூழ்மமாகவும்
அகார் அகார் கடல் பாசியாகவும்
இருக்கிறேன்

மழை வாசனையாகவும்
புல்லேறியா புல்புல்லேரியா
மண் கிருமியாகவும் இருக்கிறேன்

கோலமாகவும்
மாவுக் கல்லாகாவும்
இருக்கிறேன்

குளமாகவும்
தவளையாகவும் இருக்கிறேன்

கண்ணாடி நானாகவும்
செல்லுலாய்டு சித்திரமாகவும்

அனைத்திலும் நவீன வாழ்வில்
இரண்டகமாக இருக்கிறேன்.



# தன் மானம்

பறவைகள் இணைதேடி கூட்டிற்குச் செல்லும் நேரம். சூரியன் மெதுவாக மேகப் போர்வைக்குள் ஒளிந்து கொண்டிருந்தான். வரப்பின் மீது அமர்ந்திருந்த செல்வத்தின் கையில் மகன் முகிலன் எழுதிய கடுதாசி. முகிலன் முதுநிலைப் படிப்பிற்கான பணத்தை அனுப்பும்படி கேட்டு எழுதியிருந்த நிலையில் அதைப் படித்த செல்வம், மகனின் இளநிலைப் படிப்பிற்காக வைத்திருந்த ஒரு ஏக்கர் நிலத்தையும் அடமானம் வைத்து விட்டான். பற்றாக்குறைக்குமனைவியின் தாலிச் செயினையும் விற்றுப் படிக்க வைத்தான். இப்பொழுது முதுநிலை படிக்க வைக்க ஆசையிருந்தாலும் கையில் பணம் இல்லாததால் என்ன செய்வதென்று தெரியாமல் நிலத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். பயிர்கள் அனைத்தும் அன்னையின் அரவணைப்பிற்காக ஏங்கும் சவலப்பிள்ளைகளைப் போல மழைக்காக ஏங்கி வாடிக்கிடந்தன. செல்வத்தின் அப்பா இவனுக்காக விட்டுச் சென்ற ஒரு ஏக்கர் நிலமும் வானம் பார்த்த பூமியாக இருந்தது. காலநிலை மாற்றத்திற்கு அவனும் பலிகடா ஆகியிருந்தான்."மண்ணை வாழவைக்கும் விவசாயிக்கு இதொன்றும் புதிதல்லவே!"போன வருடம் மழையாகப் பொழிந்து செல்வத்தின் பயிர்கள் அறுவடைக்கு நின்றிருந்த நிலையில் வெள்ளத்தில் மூழ்கி வீணாய்ப் போயின.

இந்த வருடமோ மழையே பெய்யாமல் வறண்ட பூமியாய் பயிர்கள் வாடிக்கிடக்கின்றன. அன்றாட

வாழ்க்கையை ஓட்டவே சிரமப்பட்ட செல்வத்துக்கு இந்தக் கடுதாசியில் இருந்தது இடியாய் இறங்கியது. என்ன செய்வதென்று யோசித்தவனுக்குச் சட்டென உதித்தது மனோகரனின் ஞாபகம், அவனிடம் கேட்டாலென்ன?

மனோகரன் பத்தாம் வகுப்பு வரை இவனுடன் படித்தவன். அதற்கு மேல் படிக்க இந்த ஊரில் பள்ளிக்கூடம் இல்லாததால் பட்டணத்திற்கு அவன் அப்பா கூட்டிச்சென்ற நிலையில் அங்கேயே செட்டில் ஆகிவிட்டான். மனோகரன் படிப்பில் கெட்டி. ஆனால் செல்வத்துக்கோ படிப்பு ஏறவில்லை. பத்தாம் வகுப்பில் பெயில் ஆன நிலையில், அவன் அப்பாவுடன் சேர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டான்.

ஒரு சமயம் மனோகரனின் அப்பாவிற்குத் தொழிலில் நஷ்டம் ஏற்படவே, அவனின் மேற்படிப்புக்குப் பணம் கட்டாத நிலையில் செல்வத்திடம் அதைக்கூறினான். செல்வம் தான் தன்னுடைய ஒரு ஏக்கர் நிலத்தை அடமானம் வைத்து பணம் கொடுத்து உதவினான். அதற்கு பின் அவன் நிலத்தை மீட்டுத்தந்திருந்தாலும் ஓயாமல் இவன் செய்த உதவியை நன்றியுடன் நினைவு கூர்வான்.செல்வமும் இதிலென்ன இருக்கிறது என்று கூறி அவன் வாயை அடைத்து விடுவான். இப்பொழுது அவனிடமே கேட்கலாம் என்று முடிவெடுத்து வீட்டை நோக்கி நடந்தான். வீட்டினுள் நுழைந்தவன் தன் மனைவி அன்னம்மாளிடம் தான் மறுநாள் காலை பட்டணம் போவதாக கூறிவிட்டு, சாமி ரூமில் இருந்த தன் பழைய பெட்டியை எடுத்து, மனோகரன் எப்பொழுதோ எழுதிய கடுதாசியைத் தூசிதட்டி எடுத்து அதில் இருந்த முகவரியைப் படித்துவிட்டு அதனைத் தன் சட்டைப் பையினுள் வைத்துக் கொண்டான். மறுநாள் அதிகாலையிலே முதல் பஸ்சைப் பிடித்து பட்டணம் சென்றவன், எப்படியோ தேடிப்பிடித்து அந்த முகவரியில் இருந்த வீட்டின் வாயிலில் போய் நின்றான். அரண்மனை போன்ற வீடு, அதன் இருபுறமும் பூச்செடிகள், பெரிய கேட் என்று இவற்றை பிரமிப்புடன் பார்த்தவாறு உள்ளே போகலாமா? வேண்டமா? என்று மருகி நின்றான். பின்னர் தைரியத்தை வரவழைத்தவனாக கேட்டைத்திறந்து உள்ளே எட்டிப்பார்த்தவனை, உள்ளே இருந்த நாய் தன் விசுவாசத்தைக் காட்ட ‘வள்’‘வள்’ என்று குரைத்தபடி பாய்ந்து வந்தது.இதைப்பார்த்த செல்வத்துக்கு ஒரு நிமிடம் என்ன செய்வதென்று தெரியாமல் திரும்ப வெளியில் வந்து கதவைப் பூட்டிக் கொண்டான். இருப்பினும் விடாமல், நாய் இவனைப் பார்த்து குரைக்கவே! வீட்டின் பால்கனியிலிருந்து எட்டிப்பார்த்த மனோகரன் யாரது? என்று கேட்டுக் கொண்டே கீழே இறங்கி வீட்டிற்கு வெளியில் வந்தான். வந்தவன் நாயைக் கட்டிப்போட்டு விட்டு, வெளியில் அழுக்கு வேட்டியும், கசங்கிய சட்டையும், தோளில் துண்டுடன் நின்றிருந்த தன் நண்பனைக் கண்டதும் ஓடிப்போய்,

“டேய் செல்வம் எப்படா வந்த? எப்படிடா இருக்க?” என்று ஆரத்தழுவிக் கொண்டான். பின் வீட்டிற்குள் அழைத்துச்சென்றவன், பளபளவென்றிருந்த மார்பிள் தரைதளத்தையும், மேலே இருக்கும் அலங்கார விளக்குகளையும் பிரமிப்புடன் பார்த்தவாறு நின்றிருந்த செல்வத்தை

“வாடா வந்து உட்காரு” என்று சொல்லி சோபாவில் அமர வைத்து விட்டு,

“கண்மணி....கண்மணி” இங்க வந்து பாரு யாரு? வந்திருக்காங்கனு” என்று உள்ளேயிருந்த தன் மனைவியை அழைத்தான்.

“ஆ....இதோ வர்றேங்க”

என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தவளிடம்,

“நா அடிக்கடி சொல்வேன்ல என் நண்பன் செல்வம் இவன்தான்” என்று அறிமுகம் செய்து வைத்தான். பின் “இவன் இல்லைன்னா நா இப்படி படிச்சு பெரியாளா ஆகியிருக்க முடியாது?” என்று சொல்ல,

இதைக்கேட்ட கண்மணி “இதத்தான் நீங்க லட்சந்தடவைக்குமேல சொல்லியிருப்பீங்களே!”என்றவள் செல்வத்தைப் பார்த்து “வாங்கண்ணா எப்படி இருக்கீங்க வீட்ல எல்லாரும் நல்லாயிருக்காங்களா என்று நலம் விசாரித்துவிட்டு, இருங்கண்ணா நா போயி உங்களுக்கு குடிக்க ஏதாவது எடுத்து வரேன்” என்று கிச்சனை நோக்கிச் சென்றாள்.

“அப்புறம் வேறென்ன விஷயம்” என்ற மனோகரன் “உன்னப் பார்த்து எத்தனை வருஷமாச்சு, நா எத்தனை தடவ வீட்டுக்கு வாடா வாடான்னு கூப்பிட்டிருக்கேன்” என் கல்யாணத்துக்கு, என் பசங்க காது குத்துக்கின்னு எப்பவாவது வந்தியா? அப்ப எல்லாம் வராதவன் இப்ப வந்திருக்க” என்றதும் செல்வத்துக்கு சுருக்கென்றிருந்தது.

பணத்திற்காகத்தான் வந்திருக்கிறோம் என்று தெரிந்தால் தன்னைப்பற்றி என்ன நினைப்பான். தன்னை உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கும் இவனிடம் எப்படி பணம் கேட்பது அது தன் தன்மானத்திற்கு இழுக்கல்லவா! என்று கருதிய செல்வம் வேறு ஏதாவது ஒரு வகையில் ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்றெண்ணியவன் மனோகரனைப் பார்த்து,

“சும்மாதான்டா என் மகன் முகிலன் பட்டணத்துல படிக்கிறான்ல அவனப்பார்க்க வந்தேன். அப்படியே உன் ஞாபகம் வந்தது உன்னையும் பார்த்திட்டு போலாம்னு.....” என்று மழுப்பினான், கையில் காசு இல்லாவிட்டாலும் செல்வமும் செல்வந்தனே! தன்மானத்தில்.




# கடைக்குட்டி

**கா**லை வெயில் தலையில் சுள்ளென்று விழும் பொழுதில் அக்காக்குருவிகளின் அக்கூவ் என்ற சத்தம் காதுகளில் ரீங்காரமிட்டது. கார்த்திக் சன்னமான கோபத்துடன் அம்மாவிடம் கத்திக்கொண்டிருந்தான்.

“ஏம்மா என்னம்மா சமையல் பண்ணியிருக்க. சாம்பாருக்குப் போய் தொட்டுக்க கூட்டு வச்சிருக்க. இத யாரு தின்பா? நாய் கூடத் திங்காது இந்தச் சோத்த. எத்தனை தடவ சொல்லிருக்கேன் நான். சாம்பார் வச்சா பொறியல் ஏதாவது வையின்னு”

“டேய் இருக்கத தானடா வைக்கமுடியும். துரை அப்படியே சம்பாத்தியம் பண்ணி போட்டு முடிச்சிட்ட. உனக்கு வகைவகையாய் வச்சுக்குடுக்கணும் பாரு. பொங்குனது தின்னுடா”

“எனக்கு ஒண்ணும் வேணாம். நீயே கொட்டிக்க” என்று மூஞ்சியை வலித்துவிட்டுச் சென்ற கார்த்திக்குக்கு வயது இருபதாகிறது. இளங்கன்று பயமறியாது என்று பெரியவர்கள் சொல்லுவதற்கேற்ப பர்வதம் அம்மாளுக்கு மத்த எல்லாப்பிள்ளைகளையும் சமாளித்து விடுவாள். ஆனால் இந்தக் கார்த்தியைச் சமாளிப்பது பெரும்பாடுதான். அவன் இஷ்டத்துக்குச் சமைக்கவேண்டும், கேட்கும்போது காசு கொடுக்கவேண்டும். இல்லையென்றால் கோபத்தில் வீட்டிலிலுள்ள பொருள்களைப் போட்டு உடைப்பான். பிறகு சிறிது நேரம் கழித்து வந்து, அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டு,

“அம்மா சாரிம்மா. நீ ஏன் எனக்குப் பிடிச்சதைச் சமைக்கமாட்டேன்கிற. சமைச்சிருந்தா நான் சாப்பிட்டுருப்பேல்ல”

என்று அம்மாவைச் சமாதானப்படுத்திக் கொஞ்சுவான். அவளும் உச்சிகுளிர்ந்து போவாள். அவன் செய்த சேட்டைகள் மறந்துபோகும். அவளும்,

“என் ராசா. நாளைக்கு நீ கேட்டதையே சமைக்கிறேன்டா” என்று பதிலுக்குக் கொஞ்சவும், அதைப் பார்த்த அவன் தங்கை வான்மதிக்கு எரியும்.

“அவன் என்ன பண்ணாலும். ஒன்னும் சொல்லாத. என்னைய மட்டும் திட்டு. ஒரு நாளைக்குப் பெரிசா ஏதாவது பண்ணிட்டு வந்து நிப்பான். அப்ப பாக்குறேன். என்ன பண்றன்னு”

என்று திட்டுவாள். அம்மாவும் மகனும் அதைக் கண்டுகொள்வதே இல்லை.

“போடி பெரிய இவ பாரு. பொறாமை புடிச்சவ” என்று திட்டுவான்.

இப்படித்தான் கார்த்திக்கும் அவன் அம்மாவுக்குமான கொஞ்சல்கள் தொடர்கதையாகிப் போயின. மற்ற இவனது அண்ணன்களுக்கும் தங்கைக்கும் இவர்களது குணம் தெரிந்து கண்டுகொள்ளமாட்டார்கள். இவன் சண்டை போடுவதும் சமாதானம் ஆவதும் தொடர்கதையாகிப் போனது. கார்த்திக் மற்ற பிள்ளைகளை விட புத்திசாலி. ஆனால் படிக்கவைக்க சரியான வசதியில்லை. இருந்தும் டிப்ளமோ சேர்ந்து தொழில்கல்வியைக் கற்றிருந்தான். தனது தகுதிக்கேற்ற வேலை தேடிக்கொண்டிருந்தான். அவனுக்கு நிறைய நண்பர்களும் இருந்தனர். யாருக்கு என்ன பிரச்சனை என்றாலும் முதலில் போய் நிற்பான். இதனால் எல்லோருக்கும் அவனைப் பிடிக்கும். ஆண், பெண் பாகுபாடின்றி அக்கா, தங்கையாக பழகுவான். ஆனால் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று தான் நினைத்ததைச் சாதிக்க நினைப்பான். அது சரியான விசயமாகத்தான் இருக்கும். அந்தப் பிடிவாதம்தான் எல்லா முயற்சியிலும் வெற்றி பெறவும் வைத்தது. வீட்டின் கடைக்குட்டியாக இருந்ததால் அம்மாவுக்கு கார்த்திக் என்றால் உயிர்தான். எவ்வளவு சண்டை போட்டாலும் அம்மாவைச் சமாதானம் பண்ணி அவள் கையாலேயே சோறு ஊட்ட வைத்துவிடுவான். மற்றவர்கள் செய்கின்ற சேட்டைகளை மன்னிக்காத அம்மா, இவன் என்ன செய்தாலும் சமாதானமாகிக் கொஞ்ச ஆரம்பித்துவிடுவாள். ஏனென்றால் கார்த்திக் மீது அம்மாவுக்குக் கொள்ளை பிரியம்.

ஒரு நாள் அதிகாலையிலேயே கார்த்திக்கின் நண்பன் வீட்டிற்கு வந்தான்.

“டேய் கார்த்திக் அம்மாவுக்கு ரொம்ப உடம்புக்கு முடியலடா. உன் கையில காசு இருக்குமா? இல்ல யார்கிட்டயாவது வாங்கித்தர முடியுமா? என்றான். உடனே பதறிப்போன கார்த்திக்,

“இருடா. பார்க்கிறேன்” என்று வீட்டிற்குள் சென்றவன்,

“அம்மா ஏதாவது காசு வச்சுருக்கியா. சுரேஷ் அம்மாவுக்கு உடம்புக்கு முடியலையாம். பாவம்மா” என்றவனிடம்,

“என் கிட்ட ஏதுடா காசு. போய் உன் அண்ணன்கள்ட்ட கேளு” என்றாள்.

உள்ளே சென்று அண்ணனிடம் கெஞ்சிக்கூத்தாடி அவனிடம் இருந்த ஆயிரம் ரூபாய் பணத்தைப் பிடுங்கி தனது நண்பனிடம் கொடுத்து அனுப்பினான். இந்த உதவும் குணத்துக்காகவே கார்த்திக்கைக் கொண்டாடுவார்கள் நண்பர்கள். ஆறு மாதத்திற்குப் பின் தீவிரமான முயற்சியில் கார்த்திக்கு நல்ல வேலையொன்று சென்னையில் அமைந்தது. அம்மாவையும் நண்பர்களையும் பிரிந்து சென்னைக்கு சென்றான். கைநிறைய சம்பளத்துடன் அந்த வேலையும் கார்த்திக்குப் பிடித்துப்போனது. முதல் மாத சம்பளத்திலேயே அம்மாவுக்கு டிரெஸ், அண்ணன் குழந்தைகளுக்கு விளையாட்டு சாமான் என வாங்கிக் கொண்டுபோய் பார்த்துவிட்டு வந்தான். அம்மாவுக்கு மனம் மகிழ்ந்தாலும் கார்த்திக்கை பிரிந்திருப்பது மிகுந்த வேதனையைத் தந்தது. இரண்டு ஆண்டுகளில் பர்வதம் அம்மா நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். கார்த்திக்கிற்கு அம்மாவின் இறப்பு மிகுந்த வேதனையைத் தந்தது. அதிலிருந்து மீண்டுவரவே ஒரு வருடம் ஆனது. கார்த்திக்கு திருமணம் செய்யவேண்டும் என அண்ணன்கள் முடிவுசெய்தனர். அவன் பெரியப்பா மகள் ஜெயசுதா அக்காவிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

கார்த்திக்கு அவள் பார்ப்பது பிடிக்காவிட்டாலும் வேறு வழியில்லாமல் ஒப்புக்கொண்டான்.

மறுவாரமே ஒரு வரன் அமைந்திருப்பதாகவும் பொண்ணு பார்க்க கார்த்திக்கை வரச்சொல்லி போன் செய்தார்கள். கார்த்திக் கருப்பு நிறம்தான் என்றாலும் களையான முகத்தை உடையவன். பெண்ணைப் போய் பார்த்த கார்த்திக்கிற்கு பெண்ணைப் பிடிக்கவில்லை. அதைத் தனது அக்காவிடம் கூறினான். பெண் மிகச்சுமாராக இருந்தாள். அவளுக்கு மூன்று தங்கைகள் வேறு.

“பெண் சுமாராக இருந்தாலும் நல்ல குடும்பம்டா. பெண்ணுக்கு என்ன குறைச்சல்? நீயும் கறுப்பாகத்தானே இருக்கிறாய்?” என மட்டம் தட்டினாள் ஜெயசுதா அக்கா.

கார்த்திக்கிற்கு என்னதான் இருந்தாலும் தன் தாய் உயிரோடு இருந்திருந்தாலோ, தனது உடன்பிறப்புகள் என்றாலோ தனது எண்ணங்களுக்கு மதிப்பளித்திருப்பர். இவள் அடுத்தவள்தானே? அதனால்தான் தனது கருத்தையே வலியுறுத்துகிறாள் என்று எண்ணினான். எனவே,

“அக்கா இப்போதைக்கு எனக்குத் திருமணம் வேண்டாம். கொஞ்ச நாள் போகட்டும்கா” என்றான்.

“சரி நீ ஊருக்குப் போ. பார்ப்போம்” என்று அப்போதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் ஜெயா. இருப்பினும் கொஞ்ச நாள் கழித்து இவனிடம் பேசிப்பார்ப்போம் என மனதில் எண்ணிக் கொண்டாள். அவள் ஒன்று நினைத்தால் அதை நடத்திக்காட்டவேண்டும் என்ற பிடிவாதம் அவளிடம் உண்டு.

கார்த்திக்கின் வீட்டிலோ அம்மா இறந்தபிறகு அவனைப் பற்றிக் கவலைப்பட ஆளில்லாமல் போனது. அண்ணன்களுக்கு அவர்கள் குடும்பமும் தங்கைக்கு அவள் குடும்பம் பற்றியே சிந்திக்கவும் நேரம் போதவில்லை. இதில் அவன் விருப்பமறிந்து செயல்படுவதற்கு ஏது நேரம் என நினைத்துக் கொண்டனர். அவன் பெண்ணைப் பிடிக்கவில்லை எனச் சொன்னபோது,

“வேறு பெண் அமையுதா என்று பார்ப்போம்டா” என்று சொன்னதோடு அண்ணன் தன் கடமை முடிந்துவிட்டதாக எண்ணினார். ஆறு மாத காலத்திற்குப் பின் ஜெயசுதா அக்கா ஏற்கனவே பார்த்த சுப்புலட்சுமியை முடிப்போம் எனச் சொன்னபோது, கார்த்திக் வேண்டாம் எனத் தடுத்தும் அண்ணன்,

“வயது ஏறிக்கொண்டே போகுதடா. இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படியே இருப்ப. எங்க கடமைய நாங்க முடிக்கணுமில்ல. அம்மாவும் உயிரோடு இல்ல” என்றார். வேறு வழியில்லாமல் அண்ணனின் பேச்சுக்கு மதிப்பளித்து ஒரு நல்ல நாளில் சுப்புலட்சுமியைக் கரம்பிடித்தான் கார்த்திக். உறவுகளை விட ஏராளமான நண்பர்கள் புடைசூழ திருமணம் செய்துகொண்டான் கார்த்திக்.

அவன் ஆரம்ப காலத் திருமணவாழ்க்கை கொஞ்சம் சிரமப்படாமல் கழிந்தது. சுப்புலட்சுமியின் குடும்பத்தாரும் அவனிடம் பாசமாகவே இருந்தனர். ஆனால் சுப்புலட்சுமியின் குணம்தான் அவனுக்குப் பிடிபடாமல் போனது. திருமணத்திற்குப் பின் கார்த்திக் தனது அண்ணன்களுக்கோ, அவர்கள் பிள்ளைகளுக்கோ எதுவும் செய்யவிடாமல் சண்டைபோட்டாள். தனது நண்பர்கள் யாருக்கேனும் பணஉதவி செய்தாலும் அன்று சண்டைதான். நாளுக்கு நாள் சின்னச்சின்ன விசயங்களுக்கெல்லாம் சண்டைபோடும் சுப்புலட்சுமியின் போக்கு கார்த்திக்கிற்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. எதற்கெடுத்தாலும் நிமிடத்துக்கு ஒரு சண்டை. என்னடா வாழ்க்கை இது என வெறுத்துப்போனான் கார்த்திக். இதற்கிடையில் ஓராண்டில் அழகான ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தையின் மீதிருந்த பாசத்தாலும் சுப்புலட்சுமிக்குக் கீழ் மூன்று தங்கைகள் இருந்ததாலும் அவளைப் பெற்றவர்கள் வீட்டிற்கு அனுப்பவும் இயலாது போராடித் தோற்றான் கார்த்திக். நாளுக்கு நாள் சுப்புலட்சுமியின் பிடிவாதம் வலுத்துக் கொண்டே போனது.

அவனுக்குச் சோறு போட்ட அண்ணிகள் கூட,“என்ன கொழுந்தனாரே ஒரு நாள்கூட உங்கள் வீட்டிற்குக் கூப்பிடமாட்டீங்களா?” என்று கேட்கும்போது தனது மனைவியின் குணமறிந்து கூப்பிடமுடியாமல் உள்ளுக்குள் புழுங்கிப் போனான் கார்த்திக். இயல்பிலேயே எல்லோரிடமும் பாசம் காட்டும் கார்த்திக்கின் உள்ளம் குறுகிப்போனது.

நான்கு ஆண்டுகளுக்குப் பின் கார்த்திக்கின் அண்ணனுக்கு ஒரு தந்தி வந்திருந்தது. பிரித்துப் படித்தவர் மயக்கம் போடாத குறைதான்.

“டேய் என் தங்கமே ஏண்டா இப்படிப் பண்ண” என்று கதறிய அண்ணனின் குரலில் அண்ணியும் கார்த்திக் இறந்துபோனான் என்ற தந்திச் செய்தியைக் கேட்டுக் கதறினாள். வீட்டின் கடைக்குட்டி செல்லமாய் வளர்ந்த கார்த்திக் திருமணமான நான்கு ஆண்டுகளில் தனது வாழ்வை முடித்துக்கொண்டான். இறப்பிற்குப் போய் வந்த குடும்பத்தார் அவன் எப்படி இறந்தான்? என விசாரித்தனர். நீண்ட நாளைக்குப் பிறகு ஒருவரும் அறியாமல் சென்னை சென்ற அண்ணன், தன் தம்பி தனது மனைவியின் கொடுமை தாங்காது விஸ்கியில் விசம்கலந்து குடித்து இறந்தான் என்ற செய்தியில் துடித்துப்போனார். அம்மா போன பிறகு, தான் பார்த்து தம்பிக்கு வாழ்க்கை அமைத்திருந்தால் இப்படி ஆகியிருக்காதோ என மறுகினார். துடித்துப் போனது அவர் மட்டுமல்ல நிம்மதியிழந்த கார்த்திக்கின் ஆன்மாவும்தான்.



# ரோல்மாடல்

நேற்றைய மழையின் குளிரும் மண்வாசனையும் மனதுக்குள் ஜலதரங்கம் வாசிக்க, மரம், செடி, கொடிகளின் பசுமையும் பூக்களின் சிரிப்பும் தென்றலாய் இனிக்க, மலர் பூக்கூடையில் தனது வீட்டில் உள்ள மைசூர் மல்லிகையையும் பவளமல்லியையும் பறித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தன் தலையில் வைப்பதைவிட இறைவனுக்குப் படைப்பதும் செடியிலேயே விட்டுவைத்தால் அது நான்கு நாட்களுக்கு வாடாமல் அதன் அழகை ரசிப்பதும் பிடித்தமான ஒன்று. மனிதன் தனது சுயநலத்துக்காக பூக்களைக்கூட அதன்போக்கில் விடுவதில்லை. இறைவனுக்குப் பறிப்பதுகூட பூக்கள் பூத்து மூன்று நாட்களுக்குப் பிறகே செய்வாள். அம்மா,

“மலரு அந்தப் பூவ பறிக்கக்கூடாதா? அது செடியிலேயே வாடுது பாரு” என்பாள்.

“செடியில இருந்தா ரசிச்சிட்டுப் போயேம்மா. அத உடனே பறிச்சாத்தான் மனசு ஆறுமா?” என்று எகத்தாளம் பேசுவாள். அம்மா சிரித்துக்கொண்டே,

“உங்கிட்டே பேசி ஜெயிக்க முடியுமா?” என்பாள். அன்று பக்கத்துவீட்டின் சந்தில் ஜெஸி தன் குட்டிகளை ஈன்றிருந்தது. மலருக்கு ஜெஸியை மிகவும் பிடிக்கும். செவலை நிறமுடைய ஜெஸிநாய் அறியாமல் அதன் குட்டிகளைப் போய் பார்த்தாள். நான்கு குட்டிகள். கறுப்புநிறம், வெள்ளை நிறம், செவலை நிறம், வெள்ளையும் கறுப்பும் கலந்ததாய் ஒன்று என அவையெல்லாம் சின்னக்கண்களைத் திறக்க முடியாமல் முனகிக் கொண்டிருந்தன. அவற்றின் மேனி பஞ்சுமெத்தை போன்று மிருதுவாக இருந்தது. மலருக்குத் தாங்கமுடியாத மகிழ்ச்சி. அவற்றில் ஒன்றைக் கொஞ்சம் பெரிதானவுடன் வீட்டிற்குக் கொண்டுபோய் வளர்க்கவேண்டும் என்று. அம்மாவிடம் வந்து சொல்லிக் கொண்டிருந்தாள். அன்று தனது அக்காவின் மகன் கவின் ஊரிலிருந்து வருவதாக இருந்தது.

மத்தியான வேளையில் வீட்டிற்கு வந்த கவினை வரவேற்ற மலரின் தாய் தனது மகள், மருமகனின் நலம் விசாரித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள். மலருக்கும் கவின் என்றால் கொள்ளைப் பிரியம். அவனுக்குச் சாப்பிடுவதற்கு உணவு கொடுத்துவிட்டு அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று பக்கத்துவீட்டு மாறன் ‘ஐயோ’ என்று அலரும் சத்தம்கேட்டு வீட்டின் காம்பவுண்டைத்தாண்டி எட்டிப்பார்த்தாள் மலர்.

“என்னடா? என்னாச்சு”

“அக்கா ஜெஸியோட குட்டியெல்லாம் டெலிபோனுக்காக வெட்டி வச்சிருந்த குழிக்குள்ள விழுந்துருச்சுக்கா” என்றான். எனக்கும் அவனது பதற்றம் குழந்தைபோலத் தொற்றிக்கொண்டது. உடனே கவினை அழைத்துக் கொண்டு வீட்டின் முன்பு தோண்டியிருந்த ஐந்தரை அடி உயரமுள்ள டெலிபோன் குழிக்குள் சென்று எட்டிப் பார்த்தால் ஜெஸி மேலே நின்று குட்டிகளைப் பார்த்துக் குலைப்பதும் அங்குமிங்கும் நடப்பதுமாக இருந்தது. பார்ப்பதற்கே பாவமாக இருக்க, குழிக்குள் விழுந்த குட்டிகள் கண்ணே தெரியாமல் நடந்துகொண்டிருந்தன.

“இதை மேல தூக்கணும்டா. என்னடா செய்யிறது?” என்றேன்.

“ஒண்ணும் பிரச்சினையில்ல சித்தி. வீட்ல கயறும் கத்திரிக்கோலும் பழைய அகலமான கூடை இருந்தா கொண்டு வாங்க” என்றான்.

“அத வைச்சு என்ன பண்ணப்போற”

“கொண்டு வாங்க சொல்றேன்” என்றவனை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு, வீட்டிற்குள் போய் பழைய கூடையும் கொடிக்கயிறையும் கத்திரியையும் எடுத்துக் கொண்டு ஓடிவருகையில்,

“ஏண்டீ பொருள்களப் பாழாக்குற. சின்னப் பசங்களோட சேர்ந்துகிட்டு வயசுப் பொண்ணா லெட்சணமாவா வேலை செய்ற” என்று அம்மா தனது இராமயணத்தை ஆரம்பிக்க,

“உனக்கு வேற வேலையில்லையாம்மா, நீ தூங்கு வாறேன்” என விரைவாக முன்புறம் ஓடினேன். நான் வருவதற்குள் பக்கத்து வீடுகளில் உள்ள நண்டுசிண்டுகள் எல்லாம் கூடி ஜெஸியோடு சேர்ந்து பத்துப்பேர் நின்றிருந்தனர். கவின் நான் கொண்டு வந்த கயிறைவாங்கி இரண்டாக வெட்டினான். கூடையின் கைப்பிடி இரண்டு பக்கத்திலும் இறுகக் கட்டினான். பிறகு மெதுவாகக் கூடையைக் குழிக்குள் இறக்கினான். ஒரு பக்கத்தை நானும் இன்னொரு பக்கத்தை அவனும் பிடித்துக் கொண்டோம். குழிக்குள் போனவுடன் கூடையின் உள்ளே ஒரு நாய்க்குட்டி மெதுவாக அமர, மேலேயிருந்த கூட்டமெல்லாம் ‘ஏ’ என ஆரவாரம் செய்தது. நான்,

“ஷ் பேசாம இருங்க. அப்பதான் நாய்க்குட்டிகள் கூடையில் உட்காரும்” என்றேன். உடனே ‘சரிக்கா சரிக்கா’ என அமைதி காத்தனர். இன்னொரு குட்டி பேசாமல் இருக்க கவின் அதன் பக்கம் கூடையை நகர்த்தினான். முதலில் ஏறியிருந்த குட்டி சரிந்து பக்கத்தில் விழுந்தது. உடனே அனைவரும் ‘த்சு’ ‘ஐயோ’ என கத்தினர்.

“அக்கா கொஞ்சநேரம் பொறுமையா கூடையக் கீழேவிடுவோம். தானா ஒவ்வொண்ணா ஏற ஆரம்பிச்சதும் மேலே தூக்குவோம். மொத்தமா எல்லாக் குட்டியும் ஏறாது” என்றான். எனக்கும் அவன் சொல்வது சரியெனப்படவே,

“சரி அப்படியே செய்வோம்” என்றேன் நான். இவ்வாறாக வெற்றிகரமாக ஒவ்வொரு குட்டியாக மேலே தூக்கி மொத்தமாக எல்லாக்குட்டியும் மேலே வந்தவுடன், ‘ஏ’ என சிறுவர்கள் அனைவரும் ஆனந்தக்கூத்தாடினர். அரைமணி நேரத்தில் எல்லாம் முடிந்தவுடன் மாறன்,

“கவின் அண்ணா. சூப்பர்ணா எவ்வளவு கஷ்டப்பட்டு ஜெஸியோட குட்டிகள மீட்டுக் கொடுத்திருக்கீங்க நீங்கதான் என் ரோல்மாடல்ணா” என்றான். உடனே அதை ஆமோதித்து எல்லோரும் ‘ஆமா’ ‘ஆமா’ என்று கத்த ஆரம்பித்தனர். எட்டாவது படிக்கும் கவினுக்குப் பெருமை பிடிபடவில்லை. ஜெஸி மிகுந்த மகிழ்ச்சியோடு தனது குட்டிகளை நாவால் தடவி விட்டுக்கொண்டிருந்தது. அன்பின் ஈரம் காயாத அந்த மாலைப்பொழுதை மலர் ரசிக்கத் தொடங்கினாள்.




# பேரம் பேசாதீர்

சிவநகர் எழில் கொஞ்சும் சிறிய கிராமம். இக்கிராமத்தில் எழுபத்தைந்து வயதிலும் மிகவும் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டு இருப்பவரே கந்தசாமி. *(14)*

இவர் சாலையோரத்திலே பழக்கடை வைத்து இருந்தார். அவரது பழக்கடைக்கு அருகே தேங்காய் கடையும் இருந்தது. இவை இரண்டும் தனித்தனியாய் இயங்கிக் கொண்டிருந்தன. ஆலயத்திற்கும், வீட்டுக்கும் செல்பவர்கள் கடைக்குச் சென்று விதவிதமான பழங்களை தினமும் வாங்கிச் செல்வது வழக்கம். *(27)*

அவ்வூரின் அயற் கிராமத்தில் உள்ள உருத்திரபுர முருகன் கோயில் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகியது. திருவிழா நேரத்தில் கந்தசாமியைச் சுற்றி ஓரே கூட்டமாய் இருக்கும். வழமையை விட திருவிழாக் காலங்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். வழமையாக பழங்களை அவரிடமே வாங்கும் சரஸ்வதி அன்றைய தினமும் ஆராதனைக்கான பழங்களைக் கொள்வனவு செய்ய வந்து இருந்தாள். *(37)*

கந்தசாமியின் பழக்கடைக்கு வந்த சரஸ்வதி பழங்களைக் கேட்டு வாங்கி, தொட்டுப் பார்த்து, முகர்ந்தாள்.

“அண்ணே.... இன்று எங்களுடைய திருவிழா. இங்கு உள்ள பழங்கள் அனைத்தும் மொத்தமாக எங்களுக்கு வேண்டும். நாங்கள் ஆலயத்தில் பஞ்சாமிர்தம் செய்யப் போகின்றோம்.” என்றாள். *( 27)*

“சரி முழுவதையும் தராசில் நிறை போடுகிறேன்”

“ஓம் ஓம் போடுங்கள் அண்ணா” தராசில் பழங்கள் நிறுக்கிறார் கந்தசாமி.

“எவ்வளவு நிறை இருக்கிறது”

“எல்லாமாக பத்து கிலோ இருக்கிறது “

“நல்லது மொத்தமாக இவற்றின் விலை என்ன “

“மொத்தமா வாங்கப் போறதாலா இரண்டாயிரம் தந்திடுங்க சரஸ்வதி” *( 30)*

“என்ன அண்ணா நாளாந்தம் இங்கே தான் நான் பழங்களை வேண்டுகிறேன். ஆயிரத்து எழுனூறு போடுங்க. கோயில் தேவைக்கு தானே” *( 14)*

“சில்லறை வியாபாரிகள் எங்களிடமே பேரம் பேசாதீர்கள். இரண்டாயிரம் தந்துவிட்டு பழங்களைப் பெற்றுச் செல். சரஸ்வதி இந்த கடையால பெரிதாக எந்த இலாபம் இல்லை. நானும் மனைவியும் யாரிடமும் கை ஏந்தாது அன்றாடம் பட்டினி இல்லாது சாப்பிட்டா போதும். *(27)*

சரஸ்வதி விட்டபாடில்லை. பேரம் பேசியே கந்தசாமியை தன் வழிக்கு கொண்டு வந்தாள். ஆயிரத்து எழுனூறுக்கு பழங்களை வாங்கி விட்டேன் என்ற மகிழ்வில் நடந்து சென்றாள். போகும் வழியில் கிடந்த மரக்குற்றியில் தவறி விழுந்து விட்டாள். பழங்கள் அத்தனையும் கீழே விழுந்து விட்டன. *(30)*

ஒவ்வொன்றாக கீழே விழுந்த பழங்களை ஊதி ஊதி எடுத்தாள். கீழே விழுந்த பழங்களை அம்மா எடுப்பதைக் கண்ட மகள் பூமா ஓடி வந்தாள். “அம்மா கீழே விழுந்த பழங்களை பூசைக்கு பயன்படுத்த வேண்டாம்..” என்று சத்தம் போட்டாள். *( 26)*

இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தே கந்தசாமி அண்ணனிடம் பழங்களை வாங்கி இருந்தால் முருகப் பெருமான் என்னைச் சோதித்து இருக்க மட்டார் என்று எண்ணி தன்னை நொந்தபடி உள்ளே சென்றாள்.

*( 20 )*

“என்னைப் போன்று யாரும் ஏழைகளிடம் ஒருபோதும் பேரம் பேசாதீர்கள்|” என்று முணுமுணுத்தவாறு ஆலயத்திற்குச் சென்றாள்.” இறைவா! அடியேன் செய்த தவறை மன்னித்து அருள்க” என மனதார வேண்டினாள். *( 20 )*
[ *272* ]



# பரிகாரம்

அரசமரம் பிள்ளையார் கோவில், நாச்சிமுத்து புளியந்தோப்பு,நாட்டாமை வாழை தோப்பு இப்படி எங்கேயும் போக முடியவில்லை எங்கே போனாலும் ஆனந்தனின் குரல் தொடர்ந்து விரட்டி வருகிறது. ராமு நீயும் இப்படி பண்ணிட்டியா டா? உன்னைத்தானே மலை போல நம்பியிருந்தேன்.

அவன் வாங்கி கொடுத்த சரக்குக்கும் புரோட்டாவுக்கு ஆசைப்பட்டு இப்படி ஆகாத போகாத பேச்சுக்குஆளாகிட்டியே எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இந்தப் பாவத்தை போக்க முடியுமா

ராமு இப்பொழுதெல்லாம் எங்கேயும் வெளியே செல்வதில்லை வீட்டுக்குள்ளே தான் முடங்கி இருக்கிறான் வீட்டை விட்டு வெளியே போனால் ஆனந்தனின் குரல் அவனை ஏதோ செய்கிறது.

ஆனந்தனின் மனைவியும் இரண்டு வயது குழந்தையும் அவன் கண்முன்னே வந்து வந்து செல்கிறது. வயசான ஆனந்தனின் அப்பாவும் அம்மாவும் நீதிமன்ற வளாகத்தில் மண்ணள்ளி

முகத்தில் வீசியது. அழுத கண்களோடு ஆனந்தனின் மனைவியும் குழந்தையும் கண்ணை மூடினால் வந்து வந்து போகிறார்கள்.

தவறு செய்தவன் சின்னத்துரை தான் ஆனால் அவன் எந்தவிதமான குற்ற உணர்ச்சிக்கு ஆளாகாமல் அவன் உண்டு,அவன் வேலை உண்டு என வெள்ளை வேட்டியும் சட்டையுமாக மைனர் மாதிரி சுத்திகிட்டு இருக்கான். யாருடையும் பேச முடியாமல் ஒரு வா சோறு உள்ளதள்ள முடியாம ராமு அல்லாடினான்.

இப்படியே உட்கார்ந்து இருந்தா வேலை நடக்குமா போய் பொழப்ப பார்க்கிறது எவனோ போய் சேர்ந்தால் நம்ம என்ன பண்றது என்று ராமுவின் மனைவி மயிலாத்தா ஒரு பாட்டம் ஒப்பாரி வைப்பது போல திட்டி தீர்த்தாள்.

வெளியில் இறங்கி நடந்து அரசமரம் பிள்ளையார் கோவில் அருகே நின்ற போது டே ராமு இப்படி செய்யலாமாடா அநியாயமா என் கடமையை முடிக்கும் முன்னாடி இப்படி பண்ணிட்டீங்களாடா நான் என்னடா உங்களுக்கு குறை வச்சேன் நீங்க வாழ்வதற்கு நான் சாகனுமாடா என்ற ஆனந்தனின் குரல் என்னை புரட்டி போட்டது.

எங்கே போனாலும் ஆனந்தனின் முகமும் அவள் குரலும் ராமுவை உறங்கவிடாமல் செய்தது. நான் பாவம் செய்யல ஆனாலும் அதை தடுக்க என்னால முடியல நானும் உடன் இருந்தேன் என்று சாமியிடம் குழம்பி இதற்கு ஏதாவது பரிகாரம் செய்யணும் அப்பதான் என்னால வாழ முடியும் என்று சொல்லி ஆனந்தன் வீட்டுக்கு நடந்தான் ராமு.

போகும் வழியில் ஆனந்தன் உருவாக்கி வைத்த செங்கல் சூலை ஒரு காலத்தில் சிவகங்கை மானாமதுரை தேவகோட்டை என எல்லா இடங்களிலும் ஆனந்தன் சேம்பர் கல்லு தான் கொடிகட்டி பறந்தது

ராமுவுக்கு வெளிநாடு போகத்தான் ஆசை எப்படியாவது எங்கேயாவது வேலை செய்து கொஞ்சம் காசு சேர்த்து கடன உடனவாங்கி சிங்கப்பூருக்கு சென்று சம்பாதித்து வந்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தான்

ஆனால்ஆனந்தன் ராமு சின்னதுரை மூன்று பேரும் பள்ளியில் ஒன்றாய் படித்தவர்கள் படிப்பு ஓரளவுக்கு மேல் வரவில்லை ஏதாவது சொந்தமா தொழில் செய்வது முடிவெடுத்து ஆனந்தனின் மாமா சொந்தமாய் வைத்திருந்த செங்கல் சூலையில் வேலை பழகுவதற்காக சேர்ந்து நன்றாக உழைத்தான். கொஞ்ச நாளிலே வேலை பழகிக் கொண்டான் எல்லோரையும் பழகிக் கொண்டான்.

சின்னத்துரை அரசியல் ஆர்வம் உள்ளவன் அவனும் ராமுவும் உறவினர்கள் இருவரும் ஒன்றாகவே இருப்பார்கள். வெள்ள வேட்டி வெள்ளை சட்டை கட்டி எப்படியாவது அரசியலில் பெரிய ஆளாக வேண்டும் என்பது சின்ன துரையின் ஆசையாக இருந்தது.

ஆனந்தன் மேல் ராமுவுக்கு மிகுந்த பிரியம் ஆனந்தன் ராமுவுடன் தான் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வான். இது சின்னத்துரைக்கு பிடிக்காது.

ராமுவை தன்னுடனே எடுபுடி வேலைக்கு வைத்துக் கொள்ள நினைத்தான் சின்னத்துரை குடிப்பழக்கம் என பழகி விட்டான். ஆனந்தனுடன் சேராத ராமு மனுஷன் பழகுவதற்கு ஒரு தராதரம் வேணும் என்னதான் நம்ம கூட படிச்சாலும் நம்ம ஆளுகளுடன் சேர்ந்து தான் தொழில் நடத்தணும். என்ன புரியுதா.

சீக்கிரத்துல அரசியலில் பெரிய ஆள் ஆயிடுவேன் எங்க மாமா எனக்கு சீட்டு வாங்கி தரேன்னு சொல்லி இருக்காரு என் கூடவே இரு உனக்கு என்ன வேணுமோ நான் செய்கிறேன்.

சின்னதுரை அப்படியே சும்மா சுத்திகிட்டே இருந்தா பொழப்பு என்ன ஆகும் டெய்லி காலைல வெள்ளையும் சொள்ளையுமா கிளம்புறோம் சும்மா சுத்துற தலைவர் வருவாரு வட்டம் வருவாரு மாவட்ட வருவாருன்னு எடுபிடி வேலை பார்க்கிறது எனக்கு பிடித்தம் இல்லை என்னை விட்டுவிடு என்று சொல்லிவிட்டு ராமு நகர்ந்தான்.

ஆனந்தன் உடன் சேர்ந்து இவனும் செங்கல் சூளைக்கு செல்ல ஆரம்பித்தான் அவ்வப்போது சின்னத்துரை இவனை கூட வர சொல்லி கேட்பான் இவன் முடியாது என்று மறுத்து விடுவான்.

ராமுவும் ஆனந்தனும் நன்றாக செங்கல் சூலையை பெரிதாக்கினார்கள் நிறைய சம்பாதித்தார்கள். வீடு கட்டினார் திருமணம் முடித்தார் ராமு வெளிநாடு போக வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு உள்ளூரிலேயே பெரிய மனிதனாக ஆகர சூழல் வந்தது அத்தனைக்கும் காரணம் ஆனந்தன்

சின்னத்துரைக்கு ஆனந்தனையும் பிடிக்காது அவன் வளர்ச்சியும் பிடிக்கவில்லை.

ராமுவை அவ்வப்போது மிரட்டுவான் கண்டிப்பான் இருந்தாலும் சொந்தக்காரன் என்று சொல்லி அன்பாகவும் அழைப்பான். ராமு மென்மையாக மறுத்து விடுவான். ஆனந்தனின் வளர்ச்சி அவன் செல்வாக்கு பேறு புகழ்பணம் என உயர்ந்தது சின்னத்துரைக்கு சுத்தமாக பிடிக்கவில்லை.

இந்த நேரத்தில் சின்னத்துரையின் மாமா அரசியல் புள்ளி பினாமி பேரில் நிறைய கட்டிடங்கள் கட்டுவதற்கு காண்ட்ராக்ட் எடுத்திருந்தார் அதற்கு மொத்தமாக செங்கல் சப்ளை செய்ய வேண்டும் இந்த பொறுப்பை எல்லாம் சின்னத்துரை இடம் கொடுத்தால் அவன் சரியாக செய்தால் அவனுக்கு பல பொறுப்புகளை கொடுத்து முன்னேற்றலாம் என்று ஆசை காட்டினார்.

சின்னத்துரை நீண்ட நாளாக சும்மா அங்கேயும் இங்கேயும் போய்க்கொண்டிருந்தவனுக்கு ஒரு பெரிய கான்ட்ராக்ட் வருகிறது அதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

எல்லோரும் ஆனந்தனிடம் பேசி ஒரு தொகையில் செங்கல் வாங்கி அதை இன்னொரு தொகைக்கு கொடுத்த லாபம் கிடைக்கும் என்று சொன்னார்கள்

நல்ல யோசனை தான் ஆனாலும் அவன் தரம் என்ன அவன் சாதி என்ன அவனிடம் போய்யா தொழில் செயவதுஎன இருமாப்பாக சின்னத்துரை வேறு விதமாக யோசித்தான். ராமுவை வரவைத்து அவனுக்கு தண்ணீவாங்கி கொடுத்து தனியாக ஒரு செங்கல் சூளை நாம் அமைப்போம் என்ற ஆசை வார்த்தை கூறி தன் பக்கம் இழுக்க பார்த்தான்.

சின்னத்துரை அதெல்லாம் உனக்கு சரியா வராது உன் பாட்டுக்கு வேற வேலைய பாரு என்ன ராமு சொன்னான். டேய் லூசு பயலே ஒரு பெரிய கான்ட்ராக்டரா நாம சேர்ந்து செஞ்சா சரியா வரும் கூட அந்த ஆனந்தனை வச்சுக்குவோம் என்று சொல்லி அவனை அழைத்து வர வைத்தான்.

ஒரு அளவுக்கு மேல் போதை ஏறியதும் சின்னதுரைக்கு புத்தி மாறியது ஆனந்தன் கிட்ட செங்கல் வாங்கி அதை வைத்து நம்ம பெரிய ஆள் ஆகிறதா அதுக்கு பதிலா அவனே காலி பண்ணிட்டோம்னா நாம்தான் அந்த ஏரியாவுல பெரிய ஆள். அவன் அடிச்சு போட்டா கேட்க ஆள் இல்ல எவனும் வர மாட்டாங்க வந்தா பாத்துக்கலாம் நம்ம ஆளு அந்த ஊர்ல அதிகம் என்று சதி திட்டம் தீட்டினான்.

இந்த திட்டம் ராமுக்கு தெரியாது ஆனந்தனுக்கு சரக்கு புதிதாக பழகிவிட்டு அதில் விஷத்தையும் கலந்து அவன் சோழியை முடித்து குளத்தில் தள்ளி விட்டார்கள் ராமு அதிக போதையில்இருந்ததால் என்ன நடந்தது என்று அவனுக்கு தெரியவில்லை.

மறுநாள் காலையில் ஊர் குளத்தில் ஆனந்தன் பிணமாக மிதக்கிறான் என்ற செய்தி கேட்டு ஊரே திரண்டது. காவல்துறை வந்து விசாரித்தது இது எல்லா விஷயமும் ஆனந்தனின் குடும்பத்திற்கு தெரியும். ஆனால் சின்னத்துரை சாமர்த்தியமாக தன்னிடம் கடன் வாங்கியதாகவும் அது திருப்பி கேட்ட பொழுது சங்கடப்பட்டு கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டதாகவும் கதை கட்டினான்

இதை யாரும் நம்ப மறுத்தனர் ஒரே சாட்சி ராமு மட்டும் தான் அவனை வெளிநாடு அனுப்புகிறேன் எதற்கு கவலைப்படாதே நாம் இருவருக்கும் பெரிய வாய்ப்பு இருக்கிறது அவன் போன போகட்டும் எனக்காக இதை செய் ஒன்னும் பிரச்சனை வராது நான் பார்த்துக்கிறேன். என்று சொல்லி ராமுவை மிரட்டி பணிய வைத்தான்

ராமு நன்றி மறப்பதா அல்லது இவன் பேச்சு கேட்பதா ஒன்று செய்வதறியாமல் தடுமாறினார் ராமு மட்டும் அமைதியாக இருந்து விட்டால் ஆனந்தன் சாவில் எந்தவிதமான சந்தேகமும் வராது. ராமு எந்த தவறும் செய்யவில்லை யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை அமைதியாக மட்டும் இரு உனக்கு வேண்டியது நான் பார்த்துக் கொள்கிறேன் என்று ஆசை வார்த்தை கூறி உதவிகேட்டான். அவனை அமைதி ஆக்கி விட்டான். செங்கல் சேம்பரையும் சொந்தமாக்கி கொண்டான்.

நீதிமன்றம் வழக்கு வக்கீல் எல்லாம் சின்னத்துரைக்கு சாதகமாக இருந்ததால் ஆனந்தன் சாவு தற்கொலையாக மாற்றப்பட்டது. எல்லாவற்றையும் பணமும் பதவியும் சாதியும் சரி செய்தது. ஆனால் ஆனந்தன் மனைவிக்கும் அவன் குழந்தைக்கு இவர்கள் என்ன சொல்ல போகிறார்கள். அனாதையாக நிற்கும் அவன் பெற்றோருக்கும் இவர்களால் பதில் சொல்ல முடியுமா என்பது ராமுவின் மனதை போட்டு அடித்தது.

அன்று நீதிமன்றத்தில் சின்னத்துரை குற்றம் அற்றவன் என்று நிரூபிக்கப்பட்டு அவன் மிடுக்கான வெளியில் வந்தான். ஆனந்தன் பெற்றோர்கள் மண்ணை அள்ளி தூத்தினார்கள். எந்தவித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் சின்னத்துரை வெள்ளையும் சொள்ளையுமாக நடமாடினான். அவன் நினைத்தபடி அரசியலிலும் பங்கு பெற்று பெரிய இடத்தை நோக்கி போய்க்கொண்டிருந்தான்.

ராமுவின் மனம் இதையெல்லாம் ஏற்க முடியவில்லை இதற்கு பரிகாரம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான். நேராக ஆனந்தன் வீட்டுக்கு சென்றான். அவன் மனைவியிடமும் பெற்றோரிடமும் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். என்னை மன்னிச்சிடுங்க நான் எந்த தப்பும் செய்யல ஆனாலும் நான் வாயைத் திறக்க முடியவில்லை. ஆனால் என்ன நடந்தது என்று சாமிக்கு தெரியும் இந்த பாவத்தை எப்படி போக்கப் போறேன்னு புரியல.

ஆனா இப்ப என் மனசு தெளிவா இருக்கு இந்த ரெண்டு பிள்ளையும் என் புள்ளையை போல நான் பாத்துக்குவேன் ஆனந்தன்விட்டு சென்ற அந்த செங்கல் சூலையா மறுபடியும்மீட்டு நடத்தி இவங்கள கரையேற்றுவதுதான் நான் செய்யற பரிகாரம்

என்னால சின்னத்துரையோடமோதி ஆனந்தன் சாவுக்கு நீதி கேட்க முடியுமான்னு தெரியல அது கடவுள் பார்த்துக்கொள்வார் என் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் இந்த குடும்பத்தை நான் பார்த்துக்குவேன் இது மட்டும் சத்தியம் என்று சொல்லிவிட்டு ராமு அந்த குழந்தையை தூக்கிக்கொண்டான்.

சேம்பர் செங்கல் ஏற்றிய லாரியை ராமு ஓட்டி வந்த பொழுது எதிரே சின்னதுரையின் வண்டி மோதி வண்டி குளத்தில் விழுந்தது.......

கமலினிகதிர், சுவிற்சர்லாந்து

# ஏக்கம்

கண்ணாடிக் குவளை முழுவதும் நிரம்பாமல்
கால்வாசி வெற்றிடமாய் தேன்நிறத்தில் தேநீரை
காப்பகத்தாதி கையில் ஏந்தி வந்து தந்திடவும்
கசங்கிய நினைவுகள் எனைக் கடந்துபோகிறது.

காய்ச்சியபாலில் பனங்கட்டி போட்டுப் பக்குவமாய்
கொடுத்த கோப்பியின் வாசனையும் சுவையும்
கச்சிதமாய் மனதில் நிழலாட மனைவியின் ஞாபகம்
கனமாய் கனக்கிறது அவள் முகம் தேநீரில் தெரிகிறது.


கண்ணான மனையாள் கோப்பியின் சுவை நாக்கில்
கணமும் மறக்காமல் உட்கார்ந்து அரசோச்ச மனம்
கிடந்து தவிக்கிறது மனைவியின் நினைவுகளால்
கண்போன்ற மனைவி முகம் வெறுந்தேநீரில் தெரிகிறது.


கடைசிவரை என்னுடனிருந்து அவள் என்னைக்
கவனிப்பாள் என்று கவலையின்றி இருந்துவிட்டேன்
கண் மூடித் திறப்பதற்குள் எனைத் தவிக்க விட்டு
கண்ணாடியாய் நான் நொருங்க மறைந்துவிட்டாள்.

கண்மணியாய் என்வாழ்வில் பலகாலம் வாழ்ந்துவிட்டு
கணப்பொழுதில் எனை நீங்கி வேறுலகம் சென்றுவிட்டாள்
கரைந்து போகாமல் அவள் நினைவுகள் என்னுடன்
கனவுகளாய் நிழலாடி என் கண்களில் நிற்கின்றாள்.

காப்பகத்து உணவுகள் உண்ணும் போதெல்லாம்
கட்டுப்பாடாய் எனக்கு அன்போடு உணவளித்த
கைகள் நினைவில் வந்து மோதி தவிக்கிறது
கடந்துபோக முடியாமல் தள்ளாடி நிற்கின்றேன்.

காலன் எனை அழைக்கும் வரை சுமக்கவேண்டும்
கடந்தகாலம் நிகழ்காலம் என்ற பெருஞ்சுமையை
கண்டிப்பாய் நான்தான் சுமக்க வேண்டும் தெரிந்தாலும்
கனத்த என்னிதயம் கண்ணீரைச் சுரக்கிறதே.





## பா. வாசுகி, திருவண்ணாமலை

வெடித்து...
சிதறும் நெருப்பு துண்டுகள்,
மென்...
இறகதனை வாட்டி எடுக்கும்,
வெம்மை...!!!
அலையினுள்
நீறுபூத்த நெருப்பாக..!!!

கருமேகங்கள்...
காற்றினை துளைத்து
மிரட்டுகின்றது
வெண்மலையினது பனிச்சிறுத்தையினை...

ஒற்றை...
வெள்ளி விண்மீன் வழியறியா..!??
மூங்கில்...
தட்டிகளினுள்
சிம்னிவிளக்குடனான போர்குண...
விட்டில் பூச்சி..!!!

பாதையும்... முட்களாம்!!!
பயணமும்... முட்களாம்..!!!
வாழ்க்கையும்... முட்களாம்..!!!

சிலிர்த்து...!!!???
எழும் முள்ளம் பன்றியை மறந்து
போனவர்களுக்கு...

கள்ளி...
நின்றதன்மீது
காட்டு முல்லைகள்... படர்ந்திட
புரண்டோடும்
நதியின்...!!!
கவியலைகள் இரு கரைதனை அரித்துசெல்ல

சிறகும்... இல்லை
வாலும்... இல்லை
பறப்பதற்கும் தாவுவதற்கும்..,??? பேராசையின்
பீடுநடையில்...
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எத்தனை எத்தனை எண்ணங்கள்,

உழைப்பின்...!!!???
வியர்வை துளிகளாய்
நிலையற்ற...
கனவு பாதங்கள்,
இரு தூண்களின்
நீள் கயிற்றில் ஊஞ்சலாடுது

**மலர்மகள், மதுரை**

# அறியா மனம்

மூலையிலே தரையில்
இருமலுடன் முடங்கிக்
கிடக்கும் அந்த வயதான தாயின்
காதுகளில் வீழாது இருக்கட்டும்

மெத்தையிலே புரளும்
வளர்ப்பு நாயின் காய்ச்சலுக்கு
பார்த்த மருத்துவமும்
மருந்துகளின் விலையும்
கூடவே அது பற்றிய கவலையும்.

---

**நேசன் மகதி**

# வெயில் மனிதர்கள்

கடுங்கோடையின்
நண்பகலில்
தேநீர் அருந்துபவன்
ஊறுகாயாக
கொஞ்சம் சூரியனையும்
தொட்டுக்கொள்கிறான்!

---

**த. ரவீந்திரன்**

சூழ்நிலை உணர்ந்து கொள்ள
ஏதுவாக இல்லை வெறுப்பில்
துண்டித்த அழைப்பு அடுத்த கணம் வந்த
குறுஞ்செய்தியில் காணவில்லை
அன்பின் உயிர்ப்பு விழுந்ததும் உடைந்து
எழுந்து ஓடும் மழை போலான தேடலில்
இல்லை நேற்றைய விருப்பு மெல்ல
தெளிந்த குளமான மனநிலையில்
பிடிபடவில்லை நாடக அன்பு..





சாயிராம். தஞ்சாவூர்

## நிலம்

மூடியை திறந்து பார்த்த போது
பானை
எனது பிம்பத்தை
விழுங்கி இருந்தது

கைத்தவறி விழுந்து
உடைந்த பானை தான்
கோடைகாலத்தில்
தண்ணீர்பந்தல் வைக்க உதவியிருக்கிறது...

உடைந்த துண்டுகள்
ஒவ்வொன்றிலும் முழு நிலவை...
கையருகே காட்டியிருக்கிறது.

பானை உருபெற
மிதிவாங்கிய
அதே மண் தான்
ஆறடி குழிக்குள்
எனக்காக காத்திருக்கிறது

சே கார்கவி கார்த்திக்

## தொடுதல்

அது மிகவும் பிடித்தமான ஒன்றுதான்
அவர்களுக்கு மிகவும் பரிட்சையமானதும் கூட

அது சில நேரங்களில் தயக்கத்தில் முடியும்
ஆனாலும் அவைகளைத்தான் மனது எதிர்பார்க்கும்
அதுவென சொல்வதனால் எப்போதும்
வருந்திக்கொள்ளாது அது


அது புன்னகை கொடுக்கும்
சிறு கூச்சம் பரப்பிடும்
அனிச்சையை தூண்டும்
அதற்கு ஒரு விரல் மட்டும் போதுமானது இல்லை

அவ்வப்போது புன்னகையை கூறி சென்றுவிடும்
இழந்ததை உரசி சென்று விடும்
இருக்கிறேன் என்று அவ்வப்போது சொல்லி வாழும்

இதயமெனவும் அதைக் கூறலாம்
இருவரின் வாசலெனவும் கூறலாம்
மீசையையும் தாடியையும் குழந்தையாக்கி
கொஞ்சிடும்

அனைத்தையும் அணைத்து அமைதிபடுத்திவிடும்
அழுத்தமில்லாது எல்லாமுமாய் விளங்கும்

அந்த வலி அறியும் முன்னரே இதயம்
உணர்த்திவிடும்
அதற்கு வலிமை அதிகம்
வலியும் அதிகம்
பரவாயில்லை
இன்னும் மேலும் படரட்டும்
தொடுதலின் சாரல்கள்...!




# நினைவிடை தோய்தல்

ஆரணி என கவிஞனாக அறியப்பட்ட ஓய்வுநிலை யாழ் அரசஅதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களது நினைவிடை தோய்தல் கவிதைத்தொகுப்பு பார்வைக்கு கிட்டியது. ஏற்கனவே “வண்ணக்கனவுகள்” “கடற்கரைப்பூவரசு” என இரு தொகுப்புகளைத்தந்த இவரது இத்தொகுப்பு மூன்றாவது.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீனகவிதை, கைக்கூகவிதை என்ற வகையறாக்கள் எதற்குள்ளும் அடக்கிப்பார்க்கவியலாத இவைகள், சொல்புதிது பொருள் புதிதான சோதிமிக்க சந்தக்கவிதைகளாலானது இத்தொகுப்பு. இதனுள்ள கவிதைகள் யாவும் நேரடியாக பொருளுணர்த்தி நிற்பவை. எளிமையான கிராமிய சொல்லடுக்குகள் வாசிப்போரிடையே சுவாரசியத்தை ஏற்படுத்தி மனதைகவிதையுடன் கட்டிவைத்துவிடுகிறது. சமூகத்தின் மீதான அக்கறையில் மானுடநேசத்தின் விளைவாக சமூக இயக்கத்தின் பண்பாட்டுப்பிறள்வுகள், குணக்கேடுகள், அறியாமைத்தனத்து விளைவுகள், சீரழிவு சின்னத்தங்கள், வன்மங்கள் போன்ற வகையறாக்களை போட்டுடைத்து எள்ளலோடு நாசூக்காக தெரியப்படுத்தியிருப்பது கவிஞனின் புலமையே. ஒவ்வொரு கவிதைகளும் ஒவ்வொரு சிறுகதைகளாக கட்டமைந்திருக்கின்றன.

சிலகவிதைகளை எடுப்போமாகில் மனிதனால் படைக்கபட்ட மதத்தை ஒவ்வொருவரும் தமக்கேற்ப கையாளும் முறையை சுருக்கமாக இப்படி,

''மதம்''கவிதையில்... ஒருவனுக்கு தெய்வம் இன்னொருவனுக்கு பிசாசு ஒருவனுக்கு உண்மை இன்னொருவனுக்கு மாயை சிலருக்கு வாய்ப்பு சிலருக்கு ஆயுதம்,,,,,

தன்கவிதைகளை வாசிப்பவர்கள் மனநிலைபற்றி தானே விமர்சனம் வைப்பதாக அமைகிறது. ''என் மனசாட்சி'' நீயெல்லாம் முகநூலிற் நினைத்தபடி கிறுக்கியதை கவிதையெனக்கூறி லைக்கெடுக்கத்தானிங்கு லாயக்கு,,,,,,,,,,,,,,தமிழை சப்பித்துப்புவது வித்தையெனக்கூறி அதற்கு விருப்பள்ளிக்கொட்டுகிறார் கொமன்றில்,,,,,,,,நாலுவரி கோர்த்தெழுத நாயுனக்குத் தெரியவில்லை கவிதையாம் கவிதை எழுதுகிறாய் கழுதை. ( முகநூல்கவிஞர்கள் மன்னிக்கவும் )

''பாராட்டுவிழா'' கவிதையில் ஆடுகளுக்கு ஓநாய்களின் பாராட்டுவிழா,,,,,,,,,,ஆட்டுக்கொட்டி ல்களிருந்த ஆடுகள் விருந்திற்கு அழைக்கப்பட்டன. ஓநாய்களின் தாராளவாதத்தைக்கண்ட ஆடுகள் சில அவற்றோடுறங்கத் தலைப்பட்டன.

விடிந்த பொழுது பற்றைகளுக்குமேலே கழுகுகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன ஓநாய்கள் வேறொரு பாராட்டுக்கூட்டத்துக்காய் பயணித்துக்கொண்டிருந்தன. நல்லதொரு அரசியற்கருத்து

கவிஞர்கள் அதிகம் எடுத்தாளாத கருப்பொருள் இருள், இரவு, பய முறுத்துகின்ற இரவினதும், இருளினதும், இருளுணர்த்தும் தத்துவம் இயல்பாக கவியாக

''இருட்டை நேசி'' இருளை நீ ஏற்றுக்கொள் இரவுகளில் நீ மன்னிக்கப்படுகிறாய் இருள் உன்னை மறக்கச்செய்கிறது,,,,, ஏதோவோர் ஏகாந்த இருட்டில்த்தான் எல்லா சிருட்டிகளும் ஆரம்பமாகின்றன.

''தீவான் இல்லாத தேசமுண்டோ'' கவிதையின் கடைசிவரி

தீவான் இல்லாத தேசமுண்டோ என்பதெல்லாம்

தீ சுக வான் (தீவான்) தீயோடும் வானத்தோடும் சேர்ந்திசைந்து வாழும் வல்லமையுள்ளவன் என எடுத்தியம்பியிருப்பது உயர்வு நவிற்சிஅணி


புகலிடத்திலிருந்து தாயகம் வருபவர்கள் காட்டும் பகட்டு பம்மாத்து சின்னத்தனங்கள் நடிப்பெல்லாம் கவிதையில் நாடகமாக காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறன. தாயகத்தில் இறந்தவற்கு புகலிடத்திலுள்ள பிள்ளைகள் காட்டும் அக்கறை, கரிசனை கவியாக ''செத்தவீட்டு சீத்துவங்கள்'' பறைமேளம் பத்தாதெண்டு பான்டும் பிடியுங்கோ சிறப்பாகச்செய்யவேணும் சிலவெண்டு விடாதீங்கள் மணிக்கிறாம் நம்பர் மெசேச்சில அனுப்புறன். வெளிநாடுகளுக்குப் போனவர்கள் தாயக உறவுகளுடனான நட்புரிமை சமூகவாழ்விற்கு இடையயூறாயமைவதையும் அவசியமற்றவற்றை அவசியமானதாகவும் மாற்றும் பண்பாட்டுக்குலைவையும் சிறப்பாக பகன்றிருக்கின்றார்.

கொறோணாத்தொற்று, யுத்தஅவலம், அரசியல்மாற்றம் போன்றனவற்றின் பாதிப்பும் உள்ளடங்கியிருக்கின்றன. எல்லாக்கவிதைகளும் எமக்கு நெருக்கமாகி நம்மை அதுவாக மாற்றிவிடுகிறது. ஆதரவாக தோழிற்கைபோட்டு நட்பாகி நடந்து வருகிறது. கிராமியமணமும் மக்களவலங்களும் புகலிடத்திலிருந்து வருவோரின் வாசமும் அகநிலை ஈர்ப்பும், புறநிலை முரணும் கவிஞனின் மனக்கணிப்பும் கருத்துருவங்களாக தொகுப்பினுள் நடமாடித்திரிகின்றன.

தொகுப்பின் நூறாவது கவிதையாக புதுவையின் பாணியிலான கவியரங்க கவிதையில் தீவக வளமும் வாழ்வும் காட்சியாகி ஞாபகங்களை கிளர்த்தி கரைத்துவிடுகிறது, ''என் இனிய தீவகமே'' மனதிருத்தவேண்டிய கருத்தாக்கம்.

நூலினுள் கடலுண்டு, காடுண்டு, வீடுவாசல், முற்றம் கோயிலுமுண்டு. பூவரசு, புளி, வேம்பு, ஆச்சி அப்பு, மாமா அத்தை, என உறவுகளுண்டு உயிருண்டு உணர்வுண்டு.

நினைவிடை தோய்ந்து வெளியேறுகையில் உணர்வுக்கொந்தளிப்பு நம்மைப்புதுப்பித்துவிடுகிறது. அந்தவகையில் வாழ்த்தி வரவேற்கவேண்டிட சந்தக்கவிதைகள்.



ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# குறுங்கவிதைகள்

கூண்டில்
அடைத்தாலும்
கதறுவதில்லை
கர்ஜிக்கவே
செய்கிறது
சிங்கம்

வெளிப்படுத்தும்
வார்த்தைகளாலோ
கடைபிடிக்கும்
மௌனத்தாலோ
ஒரு நாள் உடைந்தே தீரும்
காலங்காலமாக
பொய்களால்
கட்டமைக்கப்பட்ட
பிம்பம்.

வாழ்க்கை சிக்கலில்
விடுபட நினைக்கும்
வாடிக்கையாளருக்கு
சீட்டெடுத்து வழிகாட்டும்
சிறகு வெட்டப்பட்ட கிளிக்கு
கடைசி வரை ஏனோ
கண்ணில் படுவதேயில்லை
ஜோசியருக்கான சீட்டு.

தேனை உறுஞ்சும்
பொன் வண்டின்
சின்னப்பாதங்களை
மென் இதழ்களால்
தாங்கி நிற்கிறது
ஒற்றைப் பூ
எத்தனை அழகானது
மகரந்த காதல்

பிரதிபலன் எதிர்பார்த்து
துளிர் விடும் விழுதினை
தரை இறக்குவதில்லை
தாய் மரம்
தரை இறக்குவது
மரத்தின் கடன்
தாங்குவது
விழுதின் கடன்.

**தங்கேஸ்**

# அலகிலா விளையாட்டு

நேற்று சொன்னது போல இருக்கிறது
ஆனால் இந்த மஞ்சள் அரளிக்கன்று
மொட்டை மாடி கைப்பிடிச் சுவரளவு
வளர்ந்து விட்டது

நேற்று விடிவெள்ளி முளைத்திருந்த
இடத்தை இன்று எதை இட்டு நிரப்பும் வானம்
என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது
இணையாக பறந்து செல்லும்
ஒரு சோடி வெண்புறாக்கள்
வானத்தை மறக்கடிக்கின்றன

அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே
கரும் மேகங்களுக்குள் மறையும் போது
காரணமற்று பொங்கி பெருகும்
உன்னுடைய துக்கம்
அதற்கொரு அலகிலா
விளையாட்டாக இருக்கிறது



# கதவு

ஒரு தானியங்கி கதவைப் போல
திறந்து மூடுகிறது மனது

யார் வருகிறார்கள்
யார் போகிறார்களென்று
சொந்தக்காரன்
அறிய வேண்டியதில்லை
போலும்

இந்த வழியாகத்தான்
அவள் வந்து போனான்


ஒரு நட்பின் துரோகம்
வந்துவிட்டுப் போனது

உறவுகள் ஒரு கடைசி புன்னகையை
மட்டும் உதிர்த்து விட்டு சென்றன

பச்சை பசேலன்று
துளசிக் கொழுந்து போல
ஒரு குழந்தையும் வந்து
முத்தமிட்டுப் போனது

எடுத்துக் கொள்வதற்கு
இனி எதுவுமில்லை என்றான பிறகு
சாத்தான் கிளம்பி போனான்

கடைசியில் தன் பங்கிற்கு
கடவுளும் வந்து
தேடிப் பார்த்து விட்டு
நிரம்பியிருந்த வெறுமையை
எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்



### கா. ந. கல்யாணசுந்தரம், சென்னை

மொழி சார்ந்து இலக்கியமாய்
வாழும் அகராதியின் கலைஞன்
அழகியலோடு நிகழ்வுகளின் காலத்தூரிகை !
அவனது பணிகள்
விரல்களின் இயக்கத்தில்
பிரபஞ்சத்தின் அடையாளங்களை
புடம் போட்டு பார்க்கின்றன !
வாழ்வின் நிதர்சனங்களில் பயணித்து
வீதிகள் தோறும் விளக்குத் தூண்களாய்
நிமிர்ந்து நிற்கிறான் !
போதி மரத்து இலைகளைக் கூட
எண்ணிப்பார்த்து இலக்குகளை
நிர்மாணிப்பவன் ....
ஏடுகளே இவனது தூவல்களுக்கு
தலைவணங்கும் என்றால்
வாசகர்கர்களின் மனமெங்கும்
இவனது படைப்புகளை
சாமரம் வீசிக் கொண்டாடும் !
காலம்கடந்தும் தாய்மொழியோடு
கைகுலுக்கும் ஆத்மார்த்த
நண்பனாகி சாதனை படைப்பவன் !
இவனுக்கான அங்கீகாரங்கள்
உச்சத்தில் இருப்பினும்
கடமை மாறாத சமூகப் போராளி !
எண்ணமும் எழுத்தும் மற்றவர்க்கே
என உழைக்கும் கவிஞன்
இவனன்றோ !



# கல்லாற்றுப்படை

இதை இப்படித்தான் எனக்கு சொல்ல வருகிறது. வேறு வகையில் சொல்வது எனக்கு சற்று சிரமம். ஏனெனில் தெரியாத ஒன்றைக் காட்டி யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம். ஆனால் ஒரு ஊரையே ஏமாற்ற முடியும் என்பதை அன்றுதான் அறிந்துக்கொண்டேன். அதை அறிந்த பிறகு எழுந்த மன ஓட்டம்தான் இது. ஏனெனில் இந்த விஷயம் மனதையும் நியாயத்தையும் தராசில் வைத்து பார்ப்பதுபோல. எந்த பக்கம் எடை இறங்குமோ தெரியாது.

அந்த நாள் இப்படித்தான் ஆரம்பித்தது. என் சித்தி மகளான தங்கச்சிக்கு மாப்பிள்ளை பார்க்கும் படலத்தின் ஒரு நாள் அது. பல மணிநேர உழைப்பிற்கு பிறகு நடுராத்திரியில் படுத்த என்னை, அதிகாலை நேரத்தில் பேசி வைத்த டூரிஸ்ட் வண்டி வந்துவிட்டதால் அவசரமாக எழுப்பினாள் என் மனைவி. தயாரானோம். கிளம்பினோம். உறக்கம் தொற்றியது மீண்டும். முழித்து பார்த்தால் பாறைப்பட்டியில் மாப்பிள்ளை வீட்டாரின் வாசல். வணக்கம் சொல்லி வரவேற்ற கரங்கள்தான் கண்முன் படர்ந்து தெரிந்தன.

உறக்கத்தை உதறிவிட்டு சிரித்து வரவேற்பை ஏற்றுக் கொண்டேன். பேச வேண்டியது பேசியாயிற்று. இருவீட்டாருக்கும் சம்மதம். கை நனைக்கும் முடிவிலிருக்கும் உறவினர்களின் மத்தியில் நான் மட்டும் சற்று நகர்ந்து வீடு தாண்டி வீதியில் காற்றோட்டமாக நின்றேன். அருமையான காட்சி அங்கே.

அகண்ட பெரிய அரசமரம். எப்படியும் இரு நூற்றாண்டுகளைப் பார்த்திருக்கும். அவ்வளவு பெரிய மரம். அருகிலேயே பெரியாண்டிச்சி கோயில். ஆனால் பெயர் மாற்றி அங்காளப் பரமேஸ்வரி என்று பெயர் பலகை வைக்கப்பட்டிருந்தது. எழிலான கோயில். போதுமான அகலத்தில் மைதானம் அவற்றின் நடுவேதான் அந்த கோயிலும் மரமும். பெரியாண்டிச்சியோ பரமேஸ்வரியோ சனத்துக்கு ஒன்னுதான். ஆனால் வரலாற்றுக்கு மட்டும் முரணானது.

மைதானம் சுற்றிலும் வேப்பமரம், ஆலமரம், இச்சிலி மரம், ஒரு அத்தி மரமும் கூட இருந்தது. அதற்கு அருகிலேயே இருக்கிறது மெயின் ரோடு. இந்த ஊர் பட்டிக்காடு என்ற வரையறையை உடைத்து கொண்டிருக்கும் ஊர் போலும். ஆங்காங்கே பெரிய மெத்தை வீடுகளின் மொட்டை மாடிகள் டீக்கடைகள், துணிக்கடை, தேவையான எல்லாமே உள்ள ஊர்தான்.

அந்தக் கோயிலின் அருகே உள்ள சாலை வழியேத்தான் இந்த மாப்பிள்ளை வீட்டிற்கு வந்திருந்தோம். தூக்க அலுப்பில் இந்த இடத்தை நான் பார்க்கவில்லை. சற்று முன்னால் நகர்ந்து போனேன். அப்போதுதான் கண்ணில் பட்டது அந்த கல்கட்டுமானம்.

ஆறுக்கு ஆறடி தூரத்தில் ஒரு சதுரத்தின் நான்கு மூலைகளில் நின்ற கல் தூண்கள். அதன் மேல் பரப்பி வைக்கப்பட்ட கற்பலகைகள். தூண்களின் எட்டு மேல் மூலைகளிலும் தொங்கும் வாழைப்பூ போன்ற போதிகைகள். சில சிற்பங்கள், சக்கரங்கள், மாடுகள், கடவுள்களின் சிற்பங்கள் என அளவெடுத்து செதுக்கப்பட்டிருப்பது தூரத்திலிருந்தே தெரிந்தது. அந்த கல்கட்டுமானத்தை கல்மண்டபம் என்றும் சொல்லலாம். அதன் மேலெல்லாம் வெள்ளையடிக்கப்பட்டு இருந்தது.

எப்படியோ அது என்னை ஈர்த்தது. நான் அதை நோக்கி போனேன். கல்மண்டபத்தின் நடுவில் தரையில் நட்டு வைக்கப்பட்டிருந்தது அந்த கல். மூன்றடி உயரம், ஓரடி அகலத்தில் இருக்கும் கல். அதில் எழுத்துகளும் பலவிதமான சித்திரங்களும் இருந்தன.

ஏற்கனவே இதில் சுண்ணாம்பு அடித்து, அது கரைந்துபோய் சித்திரங்கள் தெரிகின்றன. அவை ஒரு அங்குலம் அளவுள்ள சித்திரங்கள். கட்டம் போட்ட நோட்டில் சிறுவர்களுக்கு எழுத சொல்லித் தருவோமே, அது போன்று இருந்தது. இதுதான் கல்வெட்டுகளின் அழகே. கல்வெட்டில் எழுதும் எழுத்தும் பொறிக்கும் சித்திரமும்தான் அதை மனிதனோடு இணைக்கிறது. காலம் கடந்தும் நிற்கிறது. கல் உடைந்தாலும் எழுத்து அழியாது.

சூலம், வேல், சக்கரம் இங்க் பேனாவின் முள்ளைப் போன்ற சித்திரம், நிலவு, சூரியன், மாடுகள், ஐ, மு, ய போன்ற எழுத்துகள் தென்பட்டன. முழுதாக படிக்க முடியாதபடி கல்லின் நிறம். மரப்பட்டையின் நிறம் அது. நான் ஒரு சில நிமிடங்கள் அக்கல்லையே சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

புதிதாய் ஒரு கல்வெட்டை நான் கண்டுபிடித்து விட்டேனா? ஆனால் எழுத்துகள் இல்லையே? இருப்பதும் படிக்க முடியவில்லையே? ஒருவேளை, தமிழ் எழுத்துகளில் விடுபட்ட எழுத்துகளால் இந்த கல்வெட்டு எழுதப்பட்டிருக்கின்றதா?

அடச்சேய்..! முதலில் தமிழி, தமிழியிலிருந்து வட்டெழுத்து, வட்டெழுத்திலிருந்து இன்றைக்கு நாம் பயன்படுத்தும் நவீன தமிழ் எழுத்துகள், இதுதான் படிநிலை என்று மூளையிலிருந்து மனதுக்கு தகவல் பறந்தது. அப்படியானால் இது என்ன கல்வெட்டு? இப்படியாக என் எண்ணங்கள் கிளை விரித்து யோசித்தன. என்னால் முழுதாக படிக்க முடியாமல் போனது. இது கல்வெட்டுதானா? இப்படிகூட யோசித்திருந்தேன்.

என்ன செய்வது... நான் கொஞ்சம் வரலாறு விழைபவன். குறைந்தபட்சமேனும் வரலாறு அறிந்து வைத்திருக்கிறேன். அவற்றில் புதியன கிடைத்தால் கொண்டாடுவோம். கீழடியைப் போற்றி பாதுகாத்த குரல்களிலும் கரங்களிலும் என்னுடையதும் ஒரு பங்கு. வரலாறைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டோரில் ஒருவன் நான். எனவேதான் இந்த கல்லைச் சுற்றிச்சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

நல்லவேளையாக யாரும் பார்க்கும் முன்பே அந்த கல்வெட்டையும் கல்மண்டபத்தையும் நான் படம் பிடித்து வைத்துக்கொண்டேன். ஊருக்குள் புதிதாக யாரேனும் படம் பிடித்தால் ஊர்காரர்களுக்கு என்றுமே ஒவ்வாதுதான்.

எடுத்த படங்களை எனக்கு தெரிந்த ஒருவருக்கு அனுப்பினேன். அவருக்கு என்னைவிட வரலாறு நன்கு தெரியும். கல்வெட்டுகளைப் பற்றி அதிகம் தெரியும். அவற்றை ஆய்வு செய்பவர். தெரிந்து வைத்திருப்பவர். எப்போது கேட்டாலும் இது இன்ன கல்வெட்டு, இந்த காலகட்டம், இந்த எழுத்துமுறை, இதுதான் செய்தி என்று படப்படவெனக் கூறுவார்.

நல்லவேளையாக அவருடன் எனக்கு சிறு அறிமுகம் உள்ளது. அவருக்கு எடுத்த படங்களை அனுப்பினேன். விவரம் கேட்டேன். புலனத்தில் அவற்றை அனுப்பியதால் நான் உடனே பதில் எதிர்பார்க்க முடியாது. கொஞ்சம் நேரம் ஆகும்.

கோயில் அருகே அப்போது இருவர் தென்பட்டனர். அவர்களிடம் நான் இந்த கல்லைக் காட்டி விசாரிக்க எண்ணினேன். அவர்களை நான் அழைத்தபோது மரியாதையின் நிமித்தம் என்னிடம் வந்தனர். இருவரும் வயதில் பெரியவர்கள். யாரென விசாரித்து அறிந்தனர். பிறகே எதற்கு அழைத்தேன் என்றனர்.

'ஐயா, இந்த கல்லப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? தெரிஞ்சாக்க சொல்லுங்க.' நான் கேட்டேன். அவர்களில் ஒருவர் மட்டும் எனக்கு பதில் அளித்தார்.

'என்னது கல்லா?'

'இதோ, இந்த கல்லு.' நான் சுட்டிக் காட்டினேன்.

'இதுவா.. இந்த பவுதியில ரொம்ப நாளா இந்த கல்லு இருக்குங்க.'

'அப்படியா.. எவ்வளவு நாளா இருக்கு?'

'நானு சின்ன புள்ளையா இருந்தப்பையிலிருந்தே இருக்குது. சொன்னவர் கிட்டத்தட்ட 70 வயதைத் தொட்டிருப்பார். அவரது சிறு பிராயத்தினின்று இருக்கிறது என்றால் நிச்சயம் 100 ஆண்டுகளைத் தொட்டக் கல்தான் இது என்று நினைத்துக் கொண்டேன்.

'இந்த கல்பதியில பொங்கலானா போதும், வெள்ளையடிச்சி மாடுங்கள கூட்டியாந்து சுத்துவோம். இந்த களத்துலதான் மாடுங்கள வச்சி எருதாட்டம் உடுவோம்.'

‘ஓ... இங்கதான் எருதாட்டம் நடக்குமா? பெரிய மைதானந்தான்.’ நான் வியந்தேன்.

‘ஆமாங்க. கோயில் நோம்பியில இங்கதான் தெரக்கட்டி படம் ஓட்டுவோம். போட்டிங்கல்லாம் நடக்கும்.’

‘அப்படின்னா இந்த நெட்டிருக்கும் கல்லுல என்ன சேதி இருக்கு? நான் படிக்க நினைச்சேன். ஆனா ஒன்னும் புரியல.’

‘இதுல எழுதி இருக்கும் சேதியா? அந்தா தெரியுதே பெரிய வில்ல வீடு. அதுதான் ஊர்த்தனக்காரரோட வீடு. இங்க சுத்தியிருக்குற நெலத்துல அவங்களுக்கு சொந்தமான நெலத்தோட வெவரம் இந்த கல்லுல எழுதி இருக்குதாம்.’

அவர் சொன்னது எனக்கு இப்படித்தான் கேட்டது. ஆனால் நான் விடவில்லை. மீண்டும் கேட்டேன்.

‘ஆமாங்க. இந்த ஊருக்கு அவங்க பாட்டம்பூட்டன் வரும்போது வாங்கின நெலத்தோட அளவ இப்படி கல்லுல எழுதி வச்சாங்களாம். இதேமாதிரி இன்னும் ஒரு கல்லு இருக்காம்.’

‘இன்னும் இருக்கா.. எங்க?’ நான் கேட்டேன்.

‘நம்ம பூதநாயக்கன்பட்டி தொரையிதம்மா கோயிலுக்கு, முன்னாலயே இதே மாதிரியே ஒரு கல்லு. இதேமாதிரியே எழுதி இருக்கிற கல்லு ஒன்னு இருக்கு.’ ஒன்றைத் தொட்டு இன்னொன்று தெரியவருகிறது. அந்த முதியவரே பேச்சைத் தொடர்ந்தார்.

‘அதான் சொன்னனில்ல. ஊர்த்தனக்காரங்க அவங்களோட பாட்டம்பூட்டன் காலத்துல இங்க வந்தாங்கன்னு. அந்த ஊரிலிருந்துதான் இங்க வந்தாங்களாம். அவங்க வரும் முன்னாடியே அங்க இருந்த நெலத்த விட்டுட்டு வந்தாங்களாம். அதுக்குதான் அங்க ஒரு கல்லு. இங்க ஒரு கல்லு. அது விட்ட நெலத்துக்கு, இது தொட்ட நெலத்துக்கு.’

எதுகை மோனையெல்லாம் போட்டு அந்த பெரியவர் பேசியபோது எனக்கு கேட்கவே விருப்பமாய் இருந்தது.

அவர் சொன்னதிலிருந்து தெரிய வந்த செய்திகள் என்ன என்று நான் கோர்த்து பார்த்தேன்.

அதாவது இந்த ஊரின் தலைவர் போல் இருக்கும் அந்த ஊர்த்தனக்காரருக்கு சொந்தமான கல் மண்டபம் இது. அந்த கல்லில் அவரது நிலத்தின் அளவுகள் பற்றிய தகவல்கள் அடங்கி இருக்கலாம். அவரின் முன்னோர்கள் பூதநாயக்கன்பட்டி என்ற ஊரிலிருந்துதான் இங்கு வந்திருக்கின்றனர். அங்கேயும் இதே போன்ற கல் உள்ளதாக அந்த பெரியவர் கூறியதை வைத்துப் பார்த்தால் அவர்கள் இந்த ஊரில் இருநூறு ஆண்டுகள் முன்பு வந்திருக்க வேண்டும். இந்த அரசமரம்கூட அந்த காலகட்டத்தில் நடப்பட்டிருக்கலாம். அதுவும் 200 ஆண்டுகள் பழமையானதுபோல காட்சியளிக்கிறது. ஆக, இந்த கல்வெட்டு நிலஅளவைச் சொல்லும் கல்வெட்டு.

அந்தப் பெரியவர் சொன்னதெல்லாம் கோர்த்ததில் வந்த பிம்பம் இதுதான். அந்த ஊர்த்தனக்காரர் பெரிய சொத்துக்காரர்போல. வந்த இடம் போன இடமெல்லாம் கல்வெட்டு வைத்து நிலம் வாங்கி, நிலம் விட்டிருக்காங்க பாரேன்.

இந்த ஊரில் நிறைய பாறைகள் இருப்பதால்தான் பாறைப்பட்டி என்ற பெயர் வந்திருக்கும்போல. பாறைகள் அதிகம் என்றால் இங்கே கல்வெட்டுக்கும் வாய்ப்பிருக்கும்தானே. அப்படி இருக்க இந்த கல்வெட்டில் நிலஅளவை எழுதி வைப்பது சாதாரணம்தான்.

நிற்க.

நான் இதுவரை அந்த பெரியவரிடம் பேசியதைச் சொல்லிவிட்டேன். நான் அந்த கல்வெட்டை நினைத்து ஆச்சரியித்து கொண்டிருந்தேன் இவர்களது ஊரையும் ஊர்த்தனக்காரர்களையும் கூட பெரிதாய் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் எல்லாமே வீண்.

2.

எனக்கும் அப்படித்தான் தோன்றியது. நான் அந்த பெரியவரிடம் கேட்டுக் கொண்டிருந்த அதேவேளையில் என்னுடைய புலனத்தில் நான் கேட்டிருந்த விவரங்கள் கிடைக்கத் தொடங்கியிருந்தன. அதாவது நான் முன்பு குறிப்பிட்ட அந்த வரலாற்று ஆய்வாளர் நான் அனுப்பிய படங்களுக்கு விவரங்களைப் புலனத்திலேயே தட்டச்சிட்டு அனுப்பினார். அது மெதுவாக வந்து கொண்டிருந்தது. நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தப் பெரியவர் பேசிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார். நான் என் அலைபேசியை எடுத்து பார்த்தபோது நிறைய செய்திகள் அவர் அனுப்பி இருப்பதைக் காட்டியது. உடனே அவற்றைத் திறந்து பார்க்க வேண்டியதாயிற்று. இதுவரை நான் கேட்டவற்றை தலைகீழாய் புரட்டிப் போட்டு விட்டன. அந்த விவரங்கள்தான் இவை.

இந்த மாதிரி கல்வெட்டை கோமாரிக்கல் என்று அழைப்பார்களாம். முதல் விவரமே இதுதான். கோமாரி என்றால் மாட்டுக்கு வரும் நோய் அல்லவா என்று மனதில் பட்டது. அப்படி நோய் தாக்கினால் மாடுகள் உணவு எடுக்காமல் பால் தர முடியாமல் வாயும் கால் குளம்புகளும் சிதைந்து இறந்து போகுமாம். நோய் தாக்கப்பட்ட மாடுகளைப் பாதுகாக்க ஊருக்குள் வைக்கப்பட்ட மந்திரக்கல்தான் இந்த கோமாரிக்கல்.

இதில் பல எழுத்துக்களும் சித்திரங்களும் இருக்கும். அதில் உள்ள மந்திரங்களை ஒருவர் உச்சரிப்பார். மாடுகள் கோமாரிக்கல்லைச் சுற்றி வர செய்வார். பின்னர் மூலிகைகள் கலந்த நீரைப் பருக வைப்பார். அதன் பிறகு மாடுகளுக்கு குணமாகும்.

இதற்கு இன்னும் பல பெயர்கள் உண்டாம் சன்னியாசி கல், மந்தைவெளி கல் என்று பல பெயர்களில் இது புலங்குகிறதாம். இது மட்டுமல்ல இந்த கோமாரி நோய்க்கான காரணமே வெள்ளையர்தானாம். அவர்களது நாட்டிலிருந்து கப்பல் வரும்போது பாலுக்காக கூடவே வைத்திருக்கும் மாடுகளை நமது நாட்டு மாடுகளுடன் சேர்த்து விட்டதால் கலப்பின மாடுகள் தோன்றினவாம். அப்படி கலப்பின மாட்டிலிருந்து பரவியதுதான் கோமாரி நோயாம். ஆனால் மருத்துவ வசதிகள் அதிகம் இல்லாத அந்த காலத்தில் மாடுகளே பெருஞ்செல்வம். இது வள்ளுவர் வாக்கு. எனவே மக்கள் வைத்தியத்திற்காக சீரான பலகை போன்ற கல்லில் கட்டங்கள் போட்டு சூலம், சங்கு சக்கரம் போன்ற பல சித்திரங்களை வரைந்து சில மந்திர எழுத்துக்களையும் வெட்டி வைத்திருப்பார்களாம். இதனை சுற்றி வந்து வணங்கினால் நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு குணமாகும். மருத்துவமனைகள் இல்லாத காலத்தில் மக்கள் செய்த ஏற்பாடு இது.

இந்த மாதிரி கல்வெட்டை சங்க இலக்கியத்தில்கூட ஆதீண்டு குத்திக்கல், நடுத்தறி கல், தன்மத்தறி கல் என்று குறிப்பிட பட்டுள்ளதாம்.

இன்றைக்கு ஊர் ஊருக்கு ஒரு மாட்டுஆஸ்பத்திரி இருக்கின்றது. மாடுகளுக்கு உடல்நலம் இல்லையா? தடுப்பூசி போடலாம். ஆனால் அந்த காலத்தில் அப்படி இல்லையே. எனவே கோமாரிக்கல்தான் ஒரே வழி.

இப்படியெல்லாம் அவர் அனுப்பிய செய்திகள் புலனத்தில் வர, நான் படித்து பார்த்தபோது முதலில் பாதி புரியவில்லை. அதனால் மீண்டும் படித்துப் பார்த்தேன். இணையத்தில் நானும் தேடிப் பார்த்தேன். மெல்ல மெல்ல எல்லாம் புரிந்தது. ஆனால் இங்குதான் சிக்கலே!

*3.*

நான் இதுவரையில் படித்தறிந்த விவரங்களும் அந்த பெரியவர் சொன்ன விவரங்களும் முரணானவை.

ஆம், முரணானவை. இந்த கருத்துக்களை நான் கேட்காமலேயே விட்டிருக்கலாம் போல. இரண்டு தரப்பும் இந்த கல்வெட்டை முன்வைத்துதான் என் மூளைக்குள் மோதுகின்றன.

அதாவது இந்த கல்வெட்டு ஒரு கோமாரிக் கல். அப்படி என்றால் இது ஊர்த்தனக்காரரின் நிலஅளவைச் சொல்லும் கல் அல்ல. மாறாக மாடுகளைக் குணமாக்கும் கல். ஆக, அந்த ஊர்த்தனக்காரர் இந்த ஊராரிடம் பொய் சொல்லியிருக்கிறார். இது பல ஆண்டுகளாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஆங்கில மருத்துவம் பல்வேறு நோய்களைத் தீர்த்ததும், மக்கள் படிப்படியாக இந்த கோமாரிக்கல்லின் பயன்பாட்டை மறந்துவிட்டனர். ஆனால் இன்றைக்கும் பொங்கலன்று இந்த கோமாரிக்கல்லைச் சுற்றி வணங்குவதாக அந்த பெரியவர் சொல்லியிருந்ததும் நினைவில் வந்தது. அதாவது கோமாரிக்கல்லை வணங்குவதன் இன்றைய எச்சமாக, பொங்கலன்று சுற்றுகிற நிகழ்வு மட்டும் நடக்கிறது. ஆனால் எதற்கு சுற்றி வந்து வணங்குகிறோம் என்று அறியாத தலைமுறை நாம்தான்.

மருத்துவம் செயல்படுவதால் கோமாரிக்கல்லின் பயன் இல்லாமல் போய்விட்டது. மிக்சியும் கேஸ் அடுப்பும் வந்த பின்னர் அரவைக்கல்லும் அடுப்பும் கவிழ்த்து போடப்பட்டன இல்லையா. அதுப்போலத்தான்.

பார்த்தீர்களா... நானும் இப்போது ஒரு கல்வெட்டு ஆய்வாளன்போல செயல்படுகிறேன். ஒரு கல்வெட்டிற்கே நான் இன்றிலிருந்து நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்று பார்க்கிறேன். இதுதான் கல்வெட்டுகளின் பயன்பாடு. ஒருநாள் நடக்கும் நிகழ்வை நமக்கு காலமெல்லாம் தன்னுள் தக்கவைத்து காட்டுகிறது. இது அபூர்வம் தானே.!

அதுசரி. விசயத்திற்கு வருவோம்.

எப்படி அந்த ஊர்த்தனக்காரர் இந்த ஊராரை இப்படி சொல்லி ஏமாற்றி வைத்திருப்பார்கள் என்ற கேள்வியும் எனக்குள் தோன்றாமலில்லை.

ஊர்த்தனக்காரர்கள் தலைமுறைகளாய் ஊருக்கு தலைவர்களாக இருப்பார்கள். அவர்களின் முன்னோர்கள் பூதநாயக்கன்பட்டியில் இருந்து வந்தவர்கள் என்றும் அங்கும் இதே போல ஒரு கல் இருக்கும் என்றும் அந்த பெரியவர் கூறினார். அப்படியெனில் அந்த முன்னோர்கள் அந்த ஊரில் கோமாரிக் கல்லை நட்டு வழிபாடு நடத்தியவர்களாக இருந்திருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் மாடுகளுக்கு செய்யும் கோமாரிக் கல் வைத்தியத்தை ஒரு தொழிலாக செய்திருக்க வேண்டும். நோய் தாக்கம் அதிகமாகும்போது இவர்களுக்கு நல்ல வருமானம் வந்திருக்க வேண்டும். அதை வைத்துதான் இவர்கள் ஊர்த்தனகாரர்களாகி இன்னும் அதே பதவியில் தலைமுறைகளாக இருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் சும்மா இருக்கும் நிலத்தை இவர்களது நிலம் என்றும் கோமாரிக்கல்லை அதற்கு ஆதாரம் என்றும் பொய் சொல்லி இருக்கிறார். கோமாரிக்கல்லின் விவரம் தெரியாத சனம் இதை நம்பி இருக்கிறார்கள்.

இப்படி ஒரு தகிடதத்தத்தை நான் ஊருக்குள் வந்தவுடனேயே கண்டறிந்து விட்டேன். இதில் புதிதாய் ஒரு கோமாரிக்கல் கண்டுபிடித்ததற்கு நான் சந்தோஷப்படுவதா?

இல்லை, இந்த கோமாரிக்கல்லை வைத்து ஊர் நிலத்தை வளைத்து போட்டிருக்கும் ஊர்த்தனக்காரரின் ஏமாற்று வேலையைக் கண்டுபிடித்ததற்கு சந்தோஷப்படுவதா? அல்லது, ஊருக்குள் வந்த முதல் நாளே ஊராருடன் வம்பு வளர்க்க வேண்டாம் என்று ஒதுங்கிப் போவதா?

இப்படி நான் நினைத்துக் கொண்டிருக்கும்போதே அந்த பெரியவர் ஊர்த்தனக்காரரோடு வந்துவிட்டாரே. என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். அவரும் அறிமுகப்படுத்திக் கொண்டார். நான் சின்னதாக இந்த கல்வெட்டைப் பற்றி பேச ஆரம்பித்தேன்.

‘இந்த கோமாரிக்கல்லப் பாத்ததும் ஒடனே இதை ஆராயுனும்னு வந்தேன். கோமாரிக்கல்லுல நிறைய படங்கள் இருக்கும். அதே மாதிரி இதுலயும் இருக்கே. அழகான கல்வெட்டுங்க.’ நான் இப்படி சூசகமாக சொல்லும்போது ஊர்த்தனக்காரருக்கு முதலில் புரியவில்லை. ஆனால் அந்த பெரியவர் இதைச் சரியாக கவனித்தார். கோமாரிக்கல் என்று நான் சொன்னபோது அவர் முகம் நன்கு கவனித்தது.

‘கோமாரிக்கல்லுன்னா.?’ அவர் கேட்டார்.

‘கோமாரிக்கல்லுன்னா மாடுங்களுக்கு வைத்தியம் பண்றதுக்காக நட்ட கல்லுனு அர்த்தம்.’

‘அதுவா அர்த்தம்?’

‘ஆமாங்கய்யா. நீங்கக்கூட சொன்னிங்களே. மாட்டையெல்லாம் கூட்டிக்கிட்டு வந்து சுத்துவோம், எருதாட்டம் விடுவோம்னு. அதெல்லாம் எப்படி? இது கோமாரிக் கல்லுங்கிறதால.’ அந்த பெரியவரும் என்னிடம் பேசியவற்றை நினைவில் நிறுத்திப் பார்த்தார்.

‘இது இவங்க வீட்டு கல்லில்ல. அப்புறம் எப்படி கோமரிக்கல்லுனு சொல்லுறிங்க?’ அந்த பெரியவர் சரியாகக் கேட்டார். ஆனால் ஊர்த்தனக்காரர்தான் இந்த விசயம் இவனுக்கு எப்படி தெரியும் என்ற ரீதியில் பார்த்தார்.

‘நான் இதப்பத்தி தெரிஞ்சிக்கிட்டுதான் சொல்றேங்க.’

‘ஆனா இங்க வந்தப்ப இது என்ன கல்லுனு ஏங்கிட்டதானே கேட்டீங்க. உங்களுக்கே அப்ப தெரியல. இப்ப மட்டும் எப்படி தெரிஞ்சது?’ பெரியவர் கேட்டது மிகச் சரியான கிடுக்குபிடிக் கேள்வி.

‘நீங்களே இத பாத்து தெரிஞ்சிக்கோங்க.’ நான் என்னிடம் இருந்த அலைப்பேசியில் அவரிடம் கோமாரிக்கல்லைப் பற்றிய படங்களைக் காட்டினேன். சித்திரங்கள் மாறியிருந்தாலும் பல ஊர்களில் பல வடிவங்களில் இந்த மாதிரியான கல்வெட்டுகள் இருக்கும். அதுபோல இங்கிருக்கும் கல்வெட்டும் காணப்பட்டது. படங்களையும் நேரிலிருக்கும் கல்வெட்டையும் ஒப்பிட்டுக்கூடப் பார்த்தார் அந்த பெரியவர்.

இதுவரை அமைதியாக இருந்த ஊர்த்தனக்காரர் இது தனக்கு எதிராக போகின்றதை உணர்ந்தார். உடனே எங்களைத் தடுத்தார்.

‘இது எங்க பாட்டமூட்டு காலத்துலந்து இங்க இருக்குது தெரியுதா. நீங்க உங்க வேலைய மட்டும் பாருங்க. இது எங்க குடும்பத்தோட கல்லுதான், சரியா.?’ என்று வேகவேகமாகச் சொன்னார்.

‘அப்ப இதுல என்ன எழுதியிருக்குனு படிச்சி காட்டுங்க.’ எனது இந்த கேள்வியை அவர் எதிர்பார்க்கவே இல்லை. அந்த சித்திரங்களைப் படிக்க முடியாது. இதை அந்த பெரியவரும் பார்த்துக்கொண்டே இருந்தார். ஊர்த்தனக்காரரிடம் பதிலில்லை. அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். இதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆக, வரலாறு மீண்டும் உண்மையை வெளிகாட்டிவிட்டது. ஊர்த்தனக்காரருக்கும் இது அவரது குடும்ப கல்வெட்டு இல்லை, கோமாரிக்கல் என்று தெரிவித்தாகிவிட்டது. இனி அது அவர் பாடு. இந்த உண்மை இந்த ஊரின் ஒரு பெரியவருக்கு தெரிந்துவிட்டது. ஊருக்குள் இனி அது மெல்லப் பரவும்.

எது எப்படியோ... இது எனது ஊரில்லை. இது என் தங்கச்சிக்கு மாப்பிள்ளை பார்க்க வந்த ஊர். வந்த காரியம் சுபம். மற்றபடி இந்த கல்வெட்டையும் அதையொட்டி ஒரு பித்தலாட்டத்தையும் கண்டுபிடித்திருந்தாலும் அதைத் தட்டி கேட்கும் அதிகாரமும் எனக்கு இல்லை. எனவே தற்சமயம் கம்முனு இருப்பதே உசிதமான தீர்மானம். அதனால் நான் அங்கிருந்து கிளம்பினேன். விருந்தில் ஒரு பங்கு சாப்பிட்டுவிட்டு நாங்களும் அங்கிருந்து கிளம்பினோம்.

அமைதியாய் வீட்டிற்கு போய்க்கொண்டிருந்தபோது சிணுங்கிய என் அலைபேசியில் அந்த வரலாற்று ஆய்வாளர் ஒரு தகவல் போட்டிருந்தார். அந்த கோமாரிக்கல்லைப் பற்றி தொல்லியல் துறைக்கு சொல்லி அரசாங்க கெசட்டில் பதிவு செய்யப் போகிறாராம். அப்படியானால் அந்த கோமாரிக்கல் இதுவரையில் பதிவு செய்யப்படாத கல்வெட்டாகும். மேலும் இதைக் கண்டுப்பிடித்திருக்கிறோம் என்று பத்திரிக்கையில் செய்தி வெளியிடலாம் என்றும் கூறியுள்ளார். இதைக் கண்டுபிடித்ததற்கான ஆதாரத்துடன் நான் இருக்கிறேன். எனவே, பத்திரிக்கையில் எனது பெயரோடுதான் பதிவாகும். இது எனக்கு மகிழ்ச்சியே. ஆனால் தொல்லியல் துறை அந்த கோமாரிக்கல்லை ஆய்வு செய்ய வந்தால் என்னாகும்? அந்த ஊர்த்தனக்காரரின் பித்தலாட்டம் வெளிச்சத்திற்கு வரும். பொது நிலம் பொதுப்படையாகும்.

அடுத்தது, அந்த பெரியவர் சொன்ன இன்னொரு கல்வெட்டைப் போய் நான் பார்க்க வேண்டும். ஏனெனில் வரலாறு முக்கியம்தானே!

அ.சீனிவாசன்

# கண்மூடி(த்தன) தியானம்!!

பதினைந்து நிமிட
தியானத்திற்கு
பின்பு கதவைத்
திறந்ததில் காற்று
வந்தது.
எட்டிப் பார்த்ததில்
புதிதாய்
மலர்ந்திருந்த மலர்
கண் சிமிட்டியது.
பதினைந்து
நிமிடம் முன்பே
கதவைத்
திறந்திருந்தால்
காற்றோட்டமாக
தியானம்
செய்திருக்கலாம்.
புத்தம்புது மலர்
தானாக எட்டிப்
பார்த்து கண்
சிமிட்டியிருக்கும்.
மலரையும்
தியானத்தில்
சேர்த்துக் கொண்டிருக்கலாம்.
தியானம் இனிமையாய்
மலர்ந்திருக்கும்!
என்றைக்குத் தான்
கண்களைத் திறந்து
கொண்டு தியானிக்கப் போகிறோமோ!!!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

# வாசுகியின் தாசன்

வையத்தே உயிரேந்தி வாழ்வாங்கு வாழ்ந்து
உய்த்திடவே வள்ளுவர்தான் உபாயம் தந்தார்!
ஈரடிகளைக் கொண்டு ஈடில்லா அறநெறியைப்
பாரிதற்குத் தந்தார் பைந்தமிழில் ஓலைதான்!

காலங்கள் பல்லாண்டு கரைந்தாலும் தானின்று
ஞாலத்தில் வேரூன்றி ஞானத்தால் உட்கிளைத்து
அயல்மொழியும் பூண்டு அகத்தினிலே பரவும்
தூயதொரு வள்ளுவம் தொன்மைமிகு நல்வரம்!

தேவியும் தேவனுமாய் திகழ்ந்தவராம் இணையர்
வாவியுறை நீர்த்தெளிவாய் வாசுகிக்கு இணையார்?
திருவினையே புரிந்தவர் திசையெலாம் வள்ளுவர்
திருவையே சேர்ந்தவர் திருவள்ளுவராய் ஆனார்!

ஆட்சியும் ஆதரவும் ஆதிக்கமும் நிர்வாகமும்
அதிகாரம் பெற்றவரால் அகிலம் ஆளப்படும்!
அறம்பொருள் இன்பத்தால் ஆக்கிய வள்ளுவமோ
அதிகாரம் படைத்ததால் அதுவே ஆளப்பெறும்!

எழுத்தாணி கொண்டவர் எழுத்தே எழச்செய்யும்!
பழுதாக்கிப் போகாதே படிப்பினையே நித்தமும்!
உழுதிடும் மனவயலை உரமூட்டும் நற்செயலை!
தொழுதிடும் மனமதனைத் தொடருமே நற்பயனே!

கலங்கள் கிழித்தோடும் கார்கோள் பரப்பாய்
நிலங்கள் ஐந்திலும் நீடித்த நெடுங்கணக்காய்
வீசிடும் தென்றலாய் விண்வரை நிறைந்திட்ட
வாசுகியின் தாசனை வணங்கி மகிழ்வோம்!

ச.ஆனந்தகுமார்

# யாருமற்ற சிலுவை

கசப்பு திரவம் நிரப்பிய குப்பியை நினைவுகள் என..
எறிய முடியாமல்
பரஸ்பரம் உருகுகின்றோம்..

தருக்கின் உச்சத்தில் உமிழ்ந்த
வெம்மையின் தனல் முழுமையாய் தணிந்து
விடவில்லை..


மூச்சுத்திணறும் உன் அருகாமைகள் வசீகரமாய்
புன்னகைத்து நகர மறுக்கின்றது

நிகழ்வுகளை திசுக்களுக்குள் புகுத்தி மறதி
அமிலத்தில் கழுவ முயற்சிப்பதை தோல்வி
வெட்கமணிந்து சிரிக்கிறது..

இறந்தகாலத்தோடு வாழ்வது
வரமாகவும் சாபமாகவும் இடைவிடாமல் ஆடுகிற
பெண்டுலமென
ஊசலாடுகிறது வாழ்வியல்..

காலங்களாலும் சொற்கள் நிரப்பியும்
வடிவமைக்கப்பட்ட தன்முனைப்பு அணை உடைகிற
நொடிக்காய்..

கையறுநிலையுடன்
நிகழ்வுச்சிலுவை சுமந்து சுவாசித்திருக்கிறோம்..





# பள்ளிக்கூடம்

இரண்டுநாட்கள் இடைவிடாது பெய்த மழையில், நர்மதா தொடக்கப்பள்ளியின் சுற்றுப்புற மண்சுவர் இடிந்து விழுந்து விட்டது. சூறைக்காற்றில் கூரையும் பிய்த்துக் கொண்டுபோய் விட்டது. பிள்ளைகள் உட்கார இடமின்றித் தவித்தார்கள்..ஓரமாய் நின்ற வேப்பமர நிழலில் பிள்ளைகளை அமர்த்தி இந்துமதி வகுப்பு நடத்தினாள். ஆனால் இதையே தொடர்வது கடினம். மொத்தமாய் இருபத்தைந்து பிள்ளைகள். பெற்றோர் முகம் சுளித்தார்கள். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பத் தயங்கினார்கள்.

தலைமை ஆசிரியை இந்துமதி, மாவட்டக் கல்விஅதிகாரி அலுவலகத்துக்குச் சென்று நடந்த சம்பவத்தைக் கடிதமாய் எழுதிக் கொடுத்து உடனடி நிவாரணம் கேட்டாள்.. ``அது அறக்கட்டளைக்குச் சொந்தமானதுன்னு உங்களுக்குத் தெரியாதாம்மா?... நீங்க அந்த `ட்ரஸ்டி'கிட்ட போய்ச் சொல்லுங்க!'' என்று அங்கே அறிவுறுத்தப் பட்டது.

இந்துமதி உடனே தனது ஸ்கூட்டியை ட்ரஸ்டி-சதாசிவத்தின் வடக்குத்தெரு வீட்டுக்குச் செலுத்தினாள்.

``தபாரும்மா, அதை என்னால் சீர்ப் படுத்த முடியாது..எனக்கு அந்த யோசனையும் கிடையாது.... உங்க பள்ளிக்கூடத்துல படிக்கிற இருபத்தைந்து பிள்ளைகளையும் பக்கத்துல உள்ள அரசுப்பள்ளி எதிலாவது சேர்த்துவிட நானே ஏற்பாடு பண்றேன்... நான் `டி.இ.ஓ!''கிட்ட பேசுறேன்...!'' என்று சதாசிவம் சொல்லிவிட்டார்.

மேற்கொண்டு செய்வதறியாது இந்துமதி டீச்சர், பழைய தலைமை ஆசிரியர் நாசரைச் சென்று பார்த்தாள்.. நடந்த விபரங்களைச் சொன்னாள். முதுமை அவரைப் படுக்கையில் போட்டிருந்தது.

``அது எப்படிம்மா, நாற்பது வருசம் இயங்கின பள்ளிக்கூடத்தை மூடுறது? அறக்கட்டளைச் சொத்தை யாராலும் விற்கவும் முடியாது... இதில் ஏதோ சதிவேலை இருக்குது...இந்தப் பள்ளிக்கூடத்துல என்கிட்ட படிச்ச பையன்ங்க இன்னிக்கு நல்ல வேலைகளில் இருக்காங்க... அவங்கள்ட்ட சொன்னா நிறைய உதவி கிடைக்கும்... நீ கவலைப்படாதே...இன்னிக்கே நம்ம ஊர் `எம்.எல்,ஏ' கந்தர்வனை நீ போய்ப் பாரு...அவனும் என் மாணவன்தான்....நானும் அவன்கிட்ட அலைப்பேசியில் பேசுறேன்....நிச்சயமா நல்லது செய்வான்!''' என்றார்.

இந்துமதிக்கு கந்தர்வனைப் பார்க்கத் தயக்கமாய் இருந்தது.

இருவரும் ஒன்றாகக் கல்லூரியில் படித்தவர்கள். இரண்டாமாண்டு படிக்கையில் வாலிபத்துக்கே உரிய குறும்பில், கந்தர்வன் இந்துமதிக்கு காதல் கடிதம் கொடுத்தான். அதை இந்துமதி நேரே கல்லூரி முதல்வரிடம் கொடுத்து விட்டாள். சக மாணவர்கள் மத்தியில் அவமானப் பட்ட கந்தர்வன்,அங்கேயே படிப்பைத் தொடராமல் வேறு கல்லூரிக்குச் சென்றுவிட்டான். இவளுக்கு அவன் இப்போது நல்லது செய்வானா? கேள்வி வந்தது.

(2) தன் வீட்டு வாசலில் வந்துநின்ற ஸ்கூட்டியிலிருந்து இறங்கிய இந்துமதியை மாடியில் இருந்து பார்த்த கந்தர்வன், பழைய நினைவுகளுடன் கீழே இறங்கி வந்தான்..``வாங்கம்மா, நல்லா இருக்கீங்களா?...பார்த்துப் பல வருடங்கள் ஓடிடுச்சி....என்ன விஷயம்?!''

``நீங்க ஒரு உதவி செய்யணும் சார்....!''-என்று தொடங்கி இந்துமதி எல்லாவற்றையும் சொன்னாள்.

தலைக்கவிழ்த்து இந்துமதி சொன்னவற்றை அமைதியாய்க் கேட்ட கந்தர்வன்,``நான் படிச்ச பள்ளிக்கூடம் அது....அதுக்கு எந்தச் சேதாரமும் உண்டாக நான் விட மாட்டேன்....`டி.இ.ஓ' கிட்டேயும், டிரஸ்டிகிட்டேயும் நான் பேசுறேன்....!''

``நாசர் சார் உங்கள்ட்ட பேசுறேன்னு சொன்னாரு!''

``நான்தான் பாத்துக்கிறேன்னு சொல்றேனே...இப்பவும் என் மேல் நம்பிக்கை இல்லையா?''

இந்துமதி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில், பழைய நிகழ்வுக்கான மன்னிப்பு கோரிக்கை இருந்தது.

``தைரியமாப் போங்க இந்துமதி.....உங்களுக்கு நான் நல்லது மட்டும்தான் செய்வேன்....என்னை நீங்க பரிபூரணமா நம்பலாம்!''-என்றான் கந்தர்வன்.

அவனது வார்த்தைகளில் பழைய காதல் இன்னும் கருக்கலையாமல் அப்படியே இருப்பதாகவே இவளுக்குத் தோன்றியது. புன்னகையுடன் புறப்பட்டாள்.

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# ஒரு மெல்லிய இசையாய்



அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று
இவர்கள் அறிவதில்லை

இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று
அவர்கள் அறிவதில்லை

ஆளாளுக்கு ஒவ்வொரு கற்பிதம்
ஆளாளுக்கு ஒவ்வொரு கற்பனை

ஒவ்வொரு சொல்லுக்கும்
ஒவ்வொரு அர்த்தம்
இதயங்களுள்

ஒவ்வொரு செயலுக்கும்
நூறு எண்ணம்
மூளைக்குள்

ஏன்
ஒவ்வொரு மௌனத்துக்கும்
ஆயிரம் விகல்பம்
நெஞ்சுக்குள்

தலையில் சூடிக்கொண்டார்கள்
இறக்கமுடியாத அதிகாரக்
கிரீடங்கள்

தலையில் வைத்துக்
கொண்டாடுகிறார்கள்
ஈகோவெனும் எச்சில்

பேசித்தீர்க்கலாமென
ஒருபோதும் உதிப்பதே இல்லை

பகிர்ந்து வருத்தங்கள் போக்கலாமென
ஒருநாளும்
ஒப்புவதில்லை

அன்பின்றியே
அன்பு செய்கிறார்கள்

வரட்சியான வசந்தங்கள் எதற்கு?
அதில் குளுமை எள்ளளவேனும்
இருப்பதில்லை

வரண்ட பாலைவனங்கள் அதை விடப்
பரவாயில்லை....
வெயிலில் சிரமமில்லை,
பாலைவனமென்று அறிந்ததால்

அழுத்தங்களற்ற சுதந்திரங்களை
நேசிப்பவர்களுக்கு வழங்குங்கள்

ஒரு மெல்லிய இசையாய்
ஒரு அமைதியின் பாடலாய்
ஒரு மென்மையின் மலராய்
நிலவொளியின் வெளிர்சாத்வீகமாய்
நேத்திரங்களின் பெருநிம்மதியாய்
நேசத்தை வெளிப்படுத்துங்கள்

அறிக
உங்களை உங்களுக்கு மிக மிக அருகில்
கொண்டு வருபவர்களே
உங்களை உண்மையில் நேசிப்பவர்கள்!!

**வேலணையூர் ரஜிந்தன்**

# புழுதி




புழுதியாடை உடுத்தி
நடந்ததென் சிறு பராயம்

வெயிற் காலத் தெருவெல்லம்
பவனி வரும் புழுதி மேகம்

சுவற்றிலும் மரத்திலும்
காலிலும் கரத்திலும்
சிரசிலும் படிந்திருக்கும்
நில மகளின் புதுக்கோலம்

கிட்டிப்புல் அடித்தாடும்
வறண்ட மேடுகளில்
தேகம் போர்த்திய மேலாடை


கிளிக்கோடு மறித்தாடும்
துடினமிகு கால்களையும்
கவர்ந்து கொண்ட துகள்க்காந்தம்


ஈருருளிச் சக்கரத்தைச்
சிற்றொழுங்கைச் சவாரியென
குச்சி ஒன்றால் உருட்டி ஓட
மேனியில் ஒட்டிய வெளிப்பூச்சு

ஓடியாடும் மைதான
வெளிதனிலே காத்திருந்து
காற்றோடு கலந்து வரும்
உற்ற தோழன்

நீராட்டிச் சீராட்டிப்
புத்தாடை அணிவித்தும்
பொழுது சாயும் பொழுதுகளில்
முழுவுடலும் மேவியிருக்கும்
தங்கமுலாம்

இப்படித்தான் அந்நாளில்
தாய் நிலத்தின் பேரன்பை
புழுதியெனச் சூடியதென்
சிறு பராயம்!


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023